உ

திருச்சிற்றம்பலம்

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி

## வினா - விடை




ஆசிரியர்:

சித்தாந்த சரபம், சைவ சித்தாந்த கலாநிதி

முனைவர் **கோமதி சூரியமூர்த்தி** எம்.ஏ., பி.எச்.டி.

உ

ஓம் குமரகுருதாச சுவாமிகள் அருளிய

# குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி

*வினா-விடை*


ஆசிரியர்

**சித்தாந்தசரபம், சைவ சித்தாந்த கலாநிதி**

முனைவர் **கோமதி சூரியமூர்த்தி,** எம்.ஏ., பி.எச்.டி.

மேனாள் பேராசிரியர், சைவ சித்தாந்தத்துறை,

மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்



மஹா தேஜோ மண்டல சபை (15/88) அனுமதியுடன்

நூல் வெளியிடுவோர்:

**கீதா இராஜமகேந்திரன்,** B.Com., M.B.A.
Indian Oil Star Gas Distributor

**கல்பான மஹாதேவன்,** B.E.

**மஹாதேவன் சதாநந்தன்,** B.E., M.S. (USA)

**விஷ்ணுபிரியா கார்த்திகேயன்,** MCA

**கார்த்திகேயன் சதாநந்தன்,** B.E., Q.L.A.S.Q.S. (UK)
Computer Software Specialists, U.S.A.,

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூற்பெயர் | : **குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி வினா-விடை** |
| ஆசிரியர் | : சித்தாந்த சரபம் முனைவர் **கோமதி சூரியமூர்த்தி,** எம்.ஏ., பிஎச்.டி. |
| முதல் பதிப்பு | : மே, 2016 |
| மொழி | : தமிழ் |
| தாள் | : மேப்ளித்தோ |
| நூல் அளவு | : 1/8 டெம்மி |
| மொத்த பக்கங்கள் | : 100 |
| நூல் விலை | : ரூ.10/- |
| வெளியீடு | : நடராசன்-கனகாம்புஜம் அறக்கட்டளை<br>திருவேரகம், 117, 86வது தெரு,<br>அசோக் நகர், சென்னை - 600 083.<br>தொலைபேசி: 044-24890490 |
| அச்சிட்டோர் | : திரு.எஸ்.அரங்கநாதன்<br>எஸ்.எஸ்.கிராபிக்ஸ்,<br>54/2, முகம்மது உசேன் தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை - 600 014.<br>தொலைபேசி: 28484842 |
| நூல் கிடைக்கும் இடம் | : செ.வே.சதாநந்தன்,<br>திருவேரகம், 117, 86வது தெரு,<br>அசோக் நகர், சென்னை - 600 083.<br>தொலைபேசி : 044-24890490<br>செல்: 9444004136 |
| | : டாக்டர் கோமதி சூரியமூர்த்தி,<br>ஈசுவரகம், 391, இந்திராகாந்தி தெரு,<br>ஆழ்வார் நகர், நாகமலை, மதுரை-625019. |

உ

திருச்சிற்றம்பலம்

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# பணிந்துரை

''வருவாய் அறியா எளியேன் மருள்தீர் அடிகேள் சரணம்
திருவார் புகழ்சொன்ன பிரான் செல்வச் சிவமே சரணம்
பெருவானெனவே நாளும் பின்றா அருளால் எனையாள்
ஒருவானவனே உன்சீர் உறுநர்க்கு உலகம் பரமே''

- பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளிச் செய்த
**குமரவேள் ''பதிற்றுப்பத்தந்தாதி - பாடல் 100''**

பேரன்புடையீர்! வணக்கம்.

அத்தியாச்சிரம, சுத்தாத்வைத வைதீக, சைவ சித்தாந்த ஞானபானு என்று போற்றப்படும் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அவர்கள் சென்னையில் ஏழு மாதங்கள் மௌன நிலையில் விதேக முத்தி விரும்பி நிட்டை சாதித்து பெற்ற அனுபவங்களோடு குமரவேளின் அருளை வேண்டிப் பாடிய நூல் **குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி** ஆகும். 100 பாடல்களைக் கொண்ட இந்நூல் அருளிச் செய்யப்பட்டது சோபகிருது (1903) வருடம் ஆகும். அந்தாதி முறையில் அமைந்துள்ளது. இந்நூலின் முன்பாட்டின் முடிவுச்சொல் அடுத்த பாட்டின் முதலில் வரும்.

6666 பாடல்களால் சைவ சமய சாத்திர தோத்திர ஆராய்ச்சி நூல்களையும், 32 வியாசங்களையும், 6 மண்டலங்களாகப் பகுத்து மக்கள் இன்ப ஆக்கமும், துன்ப நீக்கமும் பெற பாம்பன் சுவாமிகள் அருளினார்கள்.

இவைகள் மக்களை நல்வழிப்படுத்தும் ஒழுக்க நெறியையும், பிறவிக் கடலைக் கடக்கும் உபாயத்தையும், இறைவன் திருவடிகளை அடைய எளிமையான பக்தி மார்க்கத்தையும் விளக்குபவைகள். இந்நூலில் சுவாமிகள் உயிர்கள் பெற வேண்டும் பேறு **இறைவன் திருவடியை அடைதல்** ஆகும் என்று கூறினார். அலையும் மனத்தை ஒருமுகப்படுத்தித் திருவடியைச் சிந்தித்து **''சரவண பவ''** என்னும் ஆறெழுத்து மந்திரத்தை உள்ளத்தில் ஓதும் தமக்கு நல்வினை, தீவினை ஆகிய இரண்டையும் அழித்து தம்மை ஆட்கொண்டருள்வாயாக என்று வேண்டுகின்றார்.

**''ஐயனே! எனக்குத் தாயும் தந்தையும் நீ; மக்களும் நீ; என்னைப் பேணி வருபவரும் நீ; சொல்லில் அடங்காத அன்புடையவரும் நீ; என்னைப் பிரியாதவரும் நீ; உற்றாரும் நீ; உரியாரும் நீ; பாடல்கள் பலவற்றைப் பாடி நினது திருவடியைப் போற்றினேன்; என்னை ஆதரித்து அருள்வார் நீயன்றி வேறு யார் உளர்'' என்று அயில்வேல் இறைவனிடம் இறைஞ்சுகின்றார்.**

இருளாகிய ஆணவமல நீக்கத்திற்கும், துன்பக் கேணியாய் உள்ள உடம்புச்சுமை நீக்கத்திற்கும் தன்னைத் திருவடியில் வைத்து தான் பரத்துவம் பெறுமாறு அருள்வழங்க நினைத்தல் வேண்டுமென்றும் குமரவேள் பெருமானிடம் முறையிடுகின்றார் பாம்பன் சுவாமிகள்.

மந்திரம், மருந்து, மாய சித்து உடையவனாக உலகத்தைப் பொன்னாக்குபவன் என்றும், செத்தவரை உயிர் பெற்று எழச் செய்வேன் என்றும், கடவுளைக் காட்டுவேன் என்றும், பொய் கூறிப் பிழைப்பு நடத்த தன்மனம் இசையவில்லையென்றும், **மடம், கோயில் ஆகியவை அமைத்து வாழவும் எண்ணினேன் அல்லேன்** என்றும் திருவடியே சரணம் என்றும் புலம்புகின்றார்.

தன்னைப் பிடித்துள்ள மும்மலங்களும் அழியும்படியாகவும், உடல் நோய்கள், வறுமை நீங்கவும், தன் வினையின் வேரை அறுக்கவும் திருவுளம் கொள்வாயாக என்று வேண்டுகின்றார்.

''எல்லோரையும் ஆட்கொண்டு அருள் செய்யும் தன்மை கொண்ட நின் திருவடியைப் பணிபவர்க்கு அருள் பொழியும் வேலுடையானே! என்பால் கேண்மை மிக்கு வேண்டுவனவற்றை அளித்து என்னை நம்புகின்ற அன்பு பொழிவோருக்கும் **''உரிய செல்வத்தை எப்போதும் வழங்கியருள் பராபரனே! நாயேனை அருளாது தள்ளிவிட்டாலும் எளியேனை நம்பி உன் திருவடிநாடும் அன்பரைத் தள்ளிவிடாது உன் திருவடி ஈந்து ஆண்டருள்க''** என்ற பற்பல விண்ணப்பங்களைச் சுவாமிகள் செய்கின்றார்.

செய்யுள் 91 முதல் 100 முடிய சுவாமிகள் முருகவேளிடம் சரண விண்ணப்பம் செய்து பதிற்றுப் பத்தந்தாதி நூலை நிறைவு செய்கிறார். இந்நூலிலுள்ள அனைத்து பாடல்களும் கல்லும் கரைந்துருகும் தன்மை வாய்ந்தன. இப்பாடல்களைக் காலையிலும், மாலையிலும் நித்ய பாராயணமாகச் சுவாமிகள் கொண்டிருந்தார்கள்.

**இந்நூலின் தனித்தன்மைகளை அறிந்து, பாம்பன் சுவாமிகள் முருகவேளிடம் அளித்த பல்வேறு விண்ணப்பங்கள் நம் பொருட்டு என்று உணர்ந்து அவைகளை வாழ்வியலாகக் கொண்டு, அடியார்கள் உய்திபெற வேண்டுமென்று கருதி இந்நூல் வெளியிடப்படுகிறது.**

செய்யுள் வடிவிலுள்ள இந்நூலைப் பண்டிதர்கள் முதல் பாமர மக்களும் எளிதாகப் புரிந்து கொள்வதற்காக எங்கள் வேண்டுகோளை ஏற்று வினா-விடை முறையில் அருளிய சித்தாந்த சரபம், சைவ சித்தாந்த கலாநிதி **முனைவர் கோமதி சூரியமூர்த்தி,** எம்.ஏ., பி.எச்.டி - (மேனாள் பேராசிரியர் சைவ சித்தாந்தத்துறை, மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்) அவர்களுக்கு எங்கள் குடும்பம் சார்பாகவும், பாம்பன் சுவாமிகளால் 1926ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மஹாதேஜோ மண்டல சபையின் சார்பாகவும் அடியேன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எழுத்துப் பணிக்காக சன்மானம் பெறாமல் அம்மையார் அவர்கள் தொடர்ந்து செய்யும் இறைத்தொண்டு மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

அம்மையார் அவர்கட்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்து, அவர்களின் இறைப்பணி மேன்மையடைய மூலகாரணமாயுள்ள அம்மையாரின் கணவர் மதுரை காமராஜ் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியர். திருவாசகச் சுடர்,

சித்தாந்தத் தொண்டர் மாமணி முனைவர் **செ.ஈ. சூர்யமூர்த்தி,** M.Sc., M.S. (U.S.A)., Ph.D., (U.S.A.) அவர்கட்கும் எங்கள் நன்றி. கணவனும் மனைவியும் ஒத்த கருத்துடன் இறைபணியில் முழுவதுமாக அர்ப்பணித்து கொள்வது திருவருள் செயலேயாகும்.

சிவபெருமான் மாணிக்கவாசகரை ஈர்த்ததுபோல சைவத் திருமுறைகளிலேயே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வரும் அம்மையார் அவர்களைப் பாம்பன் சுவாமிகள் ''ஈர்த்து ஆண்டு கொண்டதால்'' அவர்களின் நூல்களை ஓதி, உணர்ந்து, இன்புற்று, திருமூலர்போல ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற கருணை உள்ளத்தோடு ''செயற்கரிய செயல்களாக பாம்பன் சுவாமிகளின் நூல்களுக்கு எங்கள் வேண்டுகோளைக் கனிவுடன் ஏற்று, விரிவுரைகளையும் வினா-விடைகளையும் எளிய நடையில் எழுதி தருவதைப் பெரிதும் பாராட்டி, அம்மையார் அவர்களுக்கும் அவர்களின் கணவன் மற்றும் அவர்களின் குடும்பத்தார் அனைவருக்கும் பாம்பன் சுவாமிகள் குருவருளும், மயூரப்பெருமான் திருவருளும் ''சகல, செல்வ, யோகமிக்கப் பெருவாழ்வு'' தொடர்ந்து அருள பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத்தின் சார்பாக எங்கள் பெற்றோர் **நடராசன் - கனகாம்புஜம் அறக்கட்டளை** பெயரில் பாம்பன் சுவாமிகள் குருவருள் துணையோடு இந்நூல் 26வது நூலாக வெளியிடப்படுகிறது.

**நூலை அர்ப்பணித்தல்**

இந்நூல் 7.5.2008 தேதியில் 49 வயதில் முருகப்பெருமான் திருவடி அடைந்த நாவீறன் **ப.இராஜமகேந்திரன்** அவர்களின் நினைவாக வெளியிடப்படுகிறது.

தம் தாயின் வயிற்றில் கருவாய் கிடந்த காலத்திலிருந்தே பாம்பன் சுவாமிகளின் சமாதி நிலையத்தை வலம் வரவும், விழாக்காலங்களில் திருவீதி உலாவின் போது இவருடைய தாயார் சுவாமிகளின் பாடல்களைப் பாராயணம் செய்து வருவதைக் கேட்கவும் அரிய வாய்ப்பைப் பெற்றவர் இராஜமகேந்திரன். சுவாமிகளின் அறவுரைகளை நன்குணர்ந்து பலரும் சுலபமாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் சொற்பொழிவாற்றும் திறமையைப் பெற்றிருந்தார். அபூர்வமான நினைவாற்றலால் எவ்வித குறிப்புக்களைக் கையில் வைத்திருக்காமல் கோர்வையாகவும் தெளிவாகவும் விளக்கவுரை அளிக்கும் வல்லமையைப் பெற்றார்.

அவர் தமது 30வது வயதில் பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் ''பாம்பன் சுவாமிகளும், அருணகிரிநாத சுவாமிகளும்'' என்ற தலைப்பில் இவ்விருவர்களின் அருள் அனுபவங்களை ஒப்பிட்டு சிறப்புரை செய்தபோது, அவ்விழாவுக்கு தலைமை ஏற்ற சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் **மாண்பமை திரு. சிங்காரவேலு அவர்கள்** இவரின் சொற்பொழிவு கருத்தாழமாகவும், உருக்கமாகவும் இருந்ததால் அவருக்கு **''நாவீறன்''** என்ற பட்டத்தை வழங்குவதில் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்.

நாவீறனின் அகால மறைவின் போது ‘‘இப்பிறவியில் பிரார்த்த விளைகளை நிறைவு செய்தார் எண்ணி இறைவன் அவரை இளம் பிராயத்திலிலேயே அழைத்துக்கொண்டார்’’ என்று மலேசியா வருமானத்துறை தலைமை இயக்குநர் அருள்நெறி திருக்கூட்டத் தலைவர், சைவ சித்தாந்த கலாநிதி ஆயிரம் பிறைக்கண்ட அண்ணலார், சித்தாந்த சரபம் **டான்ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார்** அவர்கள் எழுதியவை ஆறுதல் மொழிகளாகும்.

‘‘வண்மை நாவீறர் வாய்மை மிகுதூய்மை
திண்மை பொதிந்த திறனாளர் - எண்ணம்
தானாம் இராச மகேந்திரர் தன் புகழுக்கு
வாளாகும் இந்நூல் வழக்கு’’

**- சித்தாந்தசரபம் டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்கள்**

இந்நூலை வெளியிட பாம்பன் சுவாமிகளால் 1926 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மஹாதேஜோ மண்டல சபை அனுமதி வழங்கியதற்காக நன்றி செலுத்துகிறோம். இந்நூலை அழகாக அச்சிட்டு உதவிய சென்னை எஸ்.எஸ். கிராபிக்ஸ் உரிமையாளர் திரு.எஸ்.அரங்கநாதன் அவர்களுக்கு நன்றி.

87 ஆம் ஆண்டு பாம்பன் சுவாமிகள் மகாகுருபூஜை விழாவை (27.05.2016) முன்னிட்டு சென்னை திருவான்மியூரிலுள்ள பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் தமிழக அரசு மேனாள் முதன்மை செயலாளர் / சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மன்றத் துணைத் தலைவர் சித்தாந்த ரத்தினம் டாக்டர் **A.M. சுவாமிநாதன்,** IAS (Retd.) அவர்கள் தலைமையிலும், சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் உச்சநீதிமன்றம் முதுநிலை வழக்கறிஞர் மாண்புமிகு நீதியரசர் திரு. R. பாலசுப்பிரமணியம் மற்றும் மஹாதேஜோ மண்டல சபை வழக்கறிஞர் திரு. P.K. சிவசுப்பிரமணியன் அவர்கள் (சென்னை உயர்நீதிமன்றம்) ஆகியோர் முன்னிலையிலும் 26.5.2016 தேதியில் இந்நூல் வெளியிடப்படுகிறது.

அடியார் பெருமக்கள் இந்நூலை ஓதி உணர்ந்து பாம்பன் சுவாமிகள் குருவருளையும் மயூரப்பெருமான் திருவருளையும் தொடர்ந்து பெற்று பயனடைய வேண்டுகிறோம்.

இங்ஙனம்
நடராசன் - கனகாம்புஜம் அறக்கட்டளை சார்பாக
பாம்பனார் - வாரியார் அடிப்பொடி
சித்தாந்த ரத்தினம் **செ.வே. சதாநந்தன்**
Chief Refinery Co.ordinator (Retd.) Indian Oil
தலைவர் - மஹாதேஜோ மண்டல சபை (தோற்றம் 1926)

**அறக்கட்டளையின் மற்ற உறுப்பினர்கள் :**

பொ.ந. நமசிவாயம், G.M., (Retd. Madras Fertilizer) & M.D., A.B.N. Logistics
வி.ச. சிவக்குமார், Manager (Retd) Southern Industries
கீதா இராஜமகேந்திரன், Indian Oil Gas Star Distributor
ந.லோ. செந்தில் நாதன், Vice President, Standard Chartered Bank

# முன்னுரை

சித்தாந்த செம்மணி, சித்தாந்த சாகரம், சித்தாந்த சரபம்,
சித்தாந்த வித்தகி, சிவஞான வாரிதி
முனைவர் **கோமதி சூரியமூர்த்தி,** M.A.,M.Phil.
(மேனாள் பேராசிரியர், சைவ சித்ததாந்தத்துறை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்)

"பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன் மாமயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறுமுகப் பரம்பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணில் இருக்கு மாமணியே போற்றி"
–கந்தபுராணம்

அண்மைக் காலத்தில் அவதரித்து, பல்லோராலும் வணங்கப்படும் பெருமையுடையவராய் இன்றும் புகழுடம்புடன் நம்மிடையே வாழ்பவர் பாம்பன் சுவாமிகள் என்று போற்றப்படும் அத்தியாச்சிரம சுத்தாத்வித வைதீக சைவசித்தாந்த ஞானபானு ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஆவார்.

சுவாமிகள் முருகப் பெருமானின் திருவருளை நிரம்பப் பெற்றவர். ஆறுமுகச் சிவனான முஜருகப்பெருமான் ஒருவரையே போற்றி வழி பட்டவர். 6666 அருட்பாடல்களை அருளி அவற்றை ஆறு மண்டலங் களாகத் தொகுத்தவர். **"குமரவேள் பதிற்றுப் பந்தாதி"** என்ற நூல் நான்காம் மண்டலத்தைச் சேர்ந்தது. 100 பாக்கள் கொண்டது சுவாமி கள் குமரவேளின் அருளை வேண்டிப் பல பாக்களில் பாடியுள்ளார்.

பாம்பன் சுவாமிகளின் நூல்கள் பற்றி எதுவும் அறியாதிருந்த அடியேனை அவற்றைப் படிக்கும்படி ஆற்றுப்படுத்தி, சுவாமிகளின் நூல்கள் பலவற்றை அன்பளிப்பாகத் தந்தவர் சென்னை மஹா தேஜோ மண்டல சபைத் தலைவரான பாம்பனார்–வாரியார் அடிப்பொடி சித்தாந்த இரத்தினம் திரு.செ.வே. சதாநந்தன் ஐயா ஆவர்.

பாம்பன் சுவாமிகள் தொடர்பாக அடியேன் எழுதிய நூல்கள் எட்டு ஆகும் (இந்நூலையும் சேர்த்து). அவை **பாம்பன் சுவாமிகள்**

**உணர்த்தும் மனித மேம்பாட்டுச் சிந்தனைகள், பாம்பன் சுவாமிகளின் பெருமை, பாம்பன் சுவாமிகள் பாடல்கள் உணர்த்தும் சைவ சித்தாந்தக் கோட்பாடுகள், பாம்பன் சுவாமிகள் பாடல்களில் சமயாசாரியர் நால்வரின் வரலாற்றுக் குறிப்புக்களும் பாடல் சிந்தனைகளும், செக்கர்வேள் செம்மாப்பு–முதற்கண்டம் வினாவிடை, பரிபூரணானந்தபோதம் வினாவிடை, தகராலய ரகசியம் வினா விடை, குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி வினாவிடை முதலியன.**

அடியேன் எழுதிய குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி வினாவிடை என்ற நூல் 26.05.2016இல் சுவாமிகளின் குரு பூஜையை (27.05.2016) முன்னிட்டு சென்னை திருவான்மியூர் பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் தமிழக அரசின் மேனாள் முதன்மை செயலாளர் மற்றும் சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மன்றம் துணைத் தலைவர் டாக்டர் ஏ.எம்.சுவாமிநாதன், I.A.S. (Retd.) அவர்களின் தலைமையில் வெளியிடப்படுகின்றது.

சித்தாந்த இரத்தினம் திரு.செ.வே. சதாநந்தன் ஐயா அவர்களின் பெற்றோர் நடராஜன் – கனகாம்புஜம் தம்பதியர் பாம்பன் சுவாமிகளிடமும், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளிடமும் மிகுந்த பக்தி உடையவர்கள். **கிருபானந்தவாரியார் சுவாமிகள்தான் ஐயாவிற்குச் சதாநந்தன் என்று பெயர் சூட்டியவர். பாம்பன் சுவாமிகள் தமக்கு அளித்த உபதேசத்தை வாரியார் சுவாமிகள் திரு. சதாநந்தன் ஐயா அவர்கட்கு வழங்கி வாழ்த்தியவர்.**

திருமதி கனகாம்புஜம் அம்மையார் அவர்கள் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருமுருகாற்றுப் படை, தேவாரம், பட்டினத்தார் பாடல்கள், சிதம்பர சுவாமிகள் பாடல்கள், பாம்பன் சுவாமிகள் பாடல்கள் பலவும் நித்திய பாராயணமாகக் கொண்டு வழிபட்டு வந்த பக்த சிரோமணியாவார். பாம்பன் சுவாமிகளிடம் அளவில்லாப் பக்தி பூண்டவர். இவர் செங்கற்பட்டு திரு. அருணகிரி வேதாசலம் திருமதி. ருக்மணி அம்மாள் தம்பதிகளுக்கு ஆற்காடு என்னும் ஊரில் பிறந்து ஷோலாப்பூர், பெல்காம், தார்வார், ஹைதராபாத் முதலிய இடங்களில் வளர்ந்தார். கன்னடம், மராட்டி, இந்தி, உருது, தமிழ் ஆகிய பல மொழிகளைக் கற்றவர். குதிரைச்

சவாரியிலும் வல்லவர். பாம்பன் சுவாமிகளை நேரில் தரிசிக்கும் பேறு பெற்றவர்.

இவ்வம்மையார் திருத்தணி, மயிலம், வடலூர், திருக்கழுக்குன்றம், வல்லக்கோட்டை, திருவல்லிக்கேணி, திருவான்மியூர் பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையம் முதலிய திருத்தலங்களுக்கு வைப்புநிதி அளித்து அதில் வரும் வருமானம் மூலம் அடியார்களுக்குப் பிரசாதம் வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள். ஏழை மக்கள், அடியார்கள், துறவிகள் ஆகியோருக்கு அன்புடன் அன்னம் வழங்கி உபசரிக்கும் புண்ணிய சீலர். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளை 78 வருடங்கட்கு முன்பிருந்தே தம் இல்லத்தில் உபசரித்து அவருடைய சமயச் சொற்பொழிவுகள் நிகழ ஏற்பாடு செய்தவர். அடிக்கடி அவருக்குப் பாதபூஜை செய்வார். இத்திருத் தொண்டுகளைச் செய்ய உறுதுணையாயிருந்த இவர்களின் கணவர் பொ.நடராச முதலியாரின் குடும்பத்தினர் மயிலம் சுப்ரமணியசாமி திருக்கோயில் பங்குனி உத்திர விழாவில் பல வருடங்களாகத் தொடர்ந்து இரவும் பகலும் அடியார்களுக்கு அன்னம்பாலிக்கும் பேற்றைப் பெற்றவர். திருப்பாதிரிப்புலியூர் தவத்திரு ஞானியார் சுவாமிகளிடத்தில் நெருங்கிய அன்பு கொண்டவர். விடுதலை வீரர்களான அரவிந்தர், பாரதியார், சுப்ரமணிய சிவா, வ.வே.சு. ஐயர் முதலியவர்கள் ஆங்கிலேயரின் பிடியில் சிக்காதபடி புதுவையில் பாதுகாப்பளித்த இளைஞர் படையில் முக்கியமானவர். பாரதியாருக்குத் தொடர்ந்து அரிசி வழங்கியும், பாரதிதாசரின் நண்பனாகவும் விளங்கியவர்.

திரு.சதாநந்தன் ஐயா பெற்றோர் நடராசன்–கனகாம்புஜம் பெயரில் அறக்கட்டளை அமைத்து அதன் சார்பாக கடந்த 43 ஆண்டுகளாகப் பங்குனி உத்திர விழாவைச் சிறப்பாக நடத்தி பாம்பன் சுவாமிகள் நூல்களைப் பதிப்பித்து இலவசமாக வெளியிட்டு வருகிறார்கள். இதுவரை அவர்கள் வெளியிட்டுள்ள நூல்கள் 26 ஆகும். அவர்கள் ஆற்றிவரும் சிவபுண்ணியச் செயல்கள் பலராலும் பெரிதும் பாராட்டுதற்குரியது. அவர்களின் குடும்பத்தினர்கள் அனைவரும் திருவருளால் எல்லா நலன்களையும் பெற்று நீடூழி சிறப்புடன் வாழ அங்கயற்கண்ணி உடனாய ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானை

இறைஞ்சி வாழ்த்தி அடியேனின் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மஹாதேஜோ மண்டல சபையினர்கட்கும், நடராஜன்–கனகாம்புஜம் அறக்கட்டளை சார்பாக நூல் வெளியிடும் கீதா இராஜ மகேந்திரன், கல்பனா மகாதேவன், மகாதேவன் சதாநந்தன், விஷ்ணு பிரியா கார்த்திகேயன், கார்த்திகேயன் சதாநந்தன், பொ.ந. நமசிவாயம், வி.ச.சிவக்குமார், ந.லோ.செந்தில்நாதன் மற்றுமுள்ள அறக்கட்டளை உறுப்பினர்கட்கும் அடியேனின் உளங்கனிந்த நன்றி.

குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி என்ற நூலுக்குத் தெளிவான உரை எழுதியவர் அருளாளர் பி.மா. சோமசுந்தரனர் அவர்கள். அன்னாருக்கும் அடியேனின் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மிகக் குறுகிய காலத்தில் நூலைச் செவ்வனே அச்சிட்டு உதவிய சென்னை எஸ்.எஸ்.கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் நன்றி.

அடியேன் மேலும் பல நூல்கள் எழுதி வெளியிட சிவம் பெருக்கும் திருத்தொண்டு ஆற்றிவரும் சைவ ஆதினங்களின் குருமகா சந்நிதானங்களின் ஆசிர்வாதங்களை வேண்டிப் பணிந்து வணங்குகின்றேன்.

அடியேன் நூல் எழுத உற்ற துணையாய் உதவுகின்ற கணவர் சித்தாந்தத் தொண்டர் மாமணி டாக்டர் செ.ஈ.சூரியமூர்த்தி, Ph.D.(U.S.A.) மேனாள் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அவர்கட்கு என்றும் நன்றி உடையேன்.

சிவெநறி வழி வாழ்ந்து அடியேனின் உள்ளத்தில் இளம் வயதிலேயே சைவசமய உணர்வை ஊன்றி வளர்த்து ஆளாக்கி அமரர்களாகிவிட்ட பிறந்து வீட்டு பெற்றோரையும், புகுந்த வீட்டுப் பெற்றோரையும் நினைவுகூர்ந்து வணங்குகின்றேன்.

**கோமதி சூரியமூர்த்தி**

ஈசுவரகம்
391, இந்திராகாந்தி தெரு
ஆழ்வார் நகர், நாகமலை, மதுரை 625 019
தொலைபேசி 0452-2458318

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

ஓம் குமரகுருதாச சுவாமிகள் அருளிய

# குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி

*வினா-விடை*

**1. குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி என்னும் நூல் அருளிச் செய்தது யார்? எப்பொழுது அருளிச் செய்தார்?**

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஆவார். சுவாமிகள் சென்னை வைத்தியநாத தெருவிலுள்ள ஒரு வீட்டு மேன்மாடத்தில் ஏழு மாதங்கள் தனித்திருந்து மௌன நிலையிலிருந்து நிட்டை சாதித்து வரும் நாளில் குமரவேளின் அருளை வேண்டிப் பாடிய நூல். இதை அருளிச் செய்த காலம் சோபகிருது வருடம் ஆகும்.

**2. இந்நூல் எந்த மண்டலத்தைச் சார்ந்தது?**

இந்நூல் நான்காம் மண்டலத்தில் தொகுக்கப்பட்டுள்ளது.

**3. நூலின் பெயர்க்காரணம் யாது?**

பதிற்றுப்பத்து என்பது ஒருவகைப் பிரபந்தம் ஆகும். எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று பதிற்றுப்பத்து. அந்தாதி என்பது செய்யுளின் இறுதியிலுள்ள எழுத்து, அசை, சீர், சொல், அடி ஆகிய இவற்றுள் யாதானும் ஒன்று அதற்கடுத்த செய்யுளில் முதலில் வருவது (யாப்பருங்கலக் காரிகை, உறுப்பியல், சூத், 17) இந்த **பதிற்றுப்பத்தந்தாதி என்ற நூலில்** முன் பாட்டின் முடிவு **சொல் அடுத்த பாட்டின் முதலில்** அமைந்துள்ளது. **சுவாமிகள் குமரவேளின் அருளை வேண்டிப்** பாடிய நூலாதலால் **இது குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி எனப்பட்டது.**

**4. இந்நூல் எத்தனை செய்யுட்கள் கொண்டுள்ளது?**

நூறு செய்யுட்களைக் கொண்டது.

**5. சுவாமிகள் முருகப் பெருமானை எவ்வாறு விளிக்கின்றார்?**

குருமணியே, குமரவேளே என விளிக்கின்றார்.

**6. உயிர்களை நீங்காத மூன்று துன்பங்கள் என்று சுவாமிகள் எவற்றைக் கூறுகின்றார்?**

பிறப்பு, வாழ்வு, சாவு என்பவற்றைக் கூறுகின்றார்.

**7. இவற்றிற்கு மூலகாரணம் யாது?**

இவற்றிற்கு மூலம் ஆணவ இருளே.

**8. திருவடிப்பேறு என்பது யாது?**

ஆணவ இருள். நீக்கமே வீடுபேறு என்னும் திருவடிப்பேறு. (சுவாமிகள் கூறுகின்றார்)

**9. உயிர்கள் பெற வேண்டும் பேறு யாது?**

உயிரக்ள் பெற வேண்டும் பேறு இறைவனின் திருவடியே ஆகும்.

**10. மனத்தின் தன்மை யாது?**

மனம் அலையும் தன்மையது.

**11. மனம் அடங்குதல் அருமையினும் அருமை என்பதற்குச் சுவாமிகள் கூறும் எடுத்துக்காட்டுக்கள் யாவை?**

“சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது” என்று தாயுமானவர் கூறுகின்றார். சுவாமிகள் பிரப்பன் வலசையில் தவம் செய்தபொழுது மனம் அடங்க ஆறு நாள்கள் சென்றன என்றார்கள்.

**12. சுவாமிகள் குமரவேளிடம் வேண்டுவது யாது?**

தன்மனம் குரவேளின் திருவடி நாட்டத்தில் ஈடுபட்டுள்ள இப்போதே, தன்னைப் பற்றியுள்ள இருவினைகளையும் அழித்து ஆட்கொண்டருள வேண்டுகின்றார்.

**13. முற்கூறிய கருத்துக்களை அடக்கிய நூலின் முதற்பாடலைக் கூறுக.**

"உலகத்தே வரு பிறப்பு இறப்புஞ் சாவும்
ஒழியாத துன்பம் எனப் பெரியாரெல்லாம்
அலகற்றே இலகும் உனதடியே சேர்ந்தார்
அவ்வடியே பெரும்பேறென்று அடியெனுந்தான்
கலகத்தால் உழலும் மனம்தனை நிறீஇக்
கருதுற்றேன் நினது கழலதனை விட்டு
விலகத்தான் இனிஎன் மன நினையுமோ என்
வினை கொன்றாள் குருமணியே குமரவேள்" (செ.1)

**14. சுவாமிகள் முருகப் பெருமானை எவ்வாறு விளிக்கின்றார்? (செ.2இல்)**

குமரவேளே, குமரகுருவே, சூரபதுமன் முதலியோரோடு போர் புரிந்தவனே, பெருமானே (பிரான்) என விளிக்கின்றார்.

**15. சுவாமிகள் முருகவேளே முழுமுதற்கடவுள் என்ற உறுதியுடையவர் என்பதை உணர்த்துக.**

உன்னை (முருகப் பெருமான்) அல்லாது வேறு ஒரு தெய்வம் தமியேனுக்கு இல்லை என்னும் உறுதியுடன், அவனுக்குரிய மந்திரமான **சரவணபவ** என்னும் ஆறெழுத்து மந்திரத்தை உள்ளத்தில் ஓதிவருபவர்.

**16. சுவாமிகள் முருகப்பெருமானிடம் எவ்வாறு வேண்டுகின்றார்?**

சரவணபவ என்னும் ஆறெழுத்து மந்திரத்தை உள்ளத்தில்

ஓதி என்னை ஆட்கொண்டருள் என்று ஓலமிடுவன் ஆயினேன். உலகை வெறுக்கும் துறவுநெறியும் மேற்கொண்டேன். காமம் ஆகிய மயக்கத்தை ஊட்டும் மன்மதன்பால் சிக்கியவரைப் போல உள்ளம் நொந்து அழிய லாயினேன். பெருமானே நின் அருளை நன்கு பெறாதவன் ஆயினேன். அருள்புரிவாயாக என்று வேண்டுகின்றார்.

"குமரவேள் குமரகுரு வாகா என்றே
குயின்று குயின்றே பன்னாள் நின்றேன்மாற்றார்
சமரவேள் உனையன்றி வேறோர் தெய்வம்
தமியேற்கு இன்றுஎன நவின்றுகாறும் உள்ளே
**அமரவேள்மறை** ஓதி ஆளாள் என்றே
அரற்றினேன் விரத்திநெறி புக்கேன் **மோகப்**
**பிமரவேள்** வயப்பட்டார் போல் உள்நொந்தேன்
பிரான் நினது கிருபை நனிபெற்றேன் அல்லேன்" (செ.2)

மோகப் பிமரவேள் – மன்மதன்
அமரவேள் மறை – சரவணபவ என்னும் ஆறெழுத்து மந்திரம்.

**17. செ.3இன் விளக்கம் தருக.**

கூர்மையான வேற்படை கொண்ட ஐயனே! எனக்குத் தாயும் தந்தையும் நீ! மக்களும் நீ! என்னைப் பேணி வருபவரும் நீ! சொல்லில் அடங்காத அன்புடையவரும் நீ! என்னைப் பிரியாதவரும் நீ! உற்றாரும் நீ! உரியாரும் நீ! என்று ஒழுகுவார் செல்லும் நெறியிலே அடியேனும் நிற்க உன்னைத் தொடர்பவன் ஆயினேன். கற்றுவல்ல அறிஞர்களைப் போல பாடல்கள் பலவற்றைப் பாடி நினது ஒலிக்கின்ற கழலணிந்த திருவடியைப் போற்றினேன். நினது அருட்செல்வம் நீங்கியவர்களைப் போல அலைகின்றேன். இனி ஆதரித்து அருள்வார் நீயன்றி வேறு யார் உளர்? சொல்லியருள்வாயாக.

"பெற்றார் நீ பிறந்தார் நீ பேணுவார் நீ
பேசரிய வன்புளர் நீ பிரிவில்லார் நீ
உற்றார் நீ உரியார் நீ என்றே நிற்பார்
உறுநெறியே நானுநிற்க உனைத் தொடர்ந்தேன்
**கற்றார்போல் கவிதைபல பாடி உன்றன்**
கனைகழலைத் துதித்தேன் நின்கருணை ஆக்கம்
அற்றார் போல் அலைகின்றேன் இனியார் என்னை
ஆதரிப்பார் சொல்லி அருள் அயில் வேலையா" (செ.3)

**18. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு விளிக்கின்றார்? (செ.4இல்)**

எல்லாத் தெய்வங்களும் வந்து தொழும் குகப் பரமனே என விளிக்கின்றார்.

**19. முக்தித் தடைகள் மூன்று எவை என உரையாசிரியர் கூறுகின்றார்?**

அறியாமை, ஐயம், திரிபு எனப்படும் முக்தித் தடைகள் மூன்று என்கின்றார் (செ.4இன் உரை).

**20. ஒரு சிறிய வடிவில் இறைவனை வழிபட இயலாமைக்கு சுவாமிகள் என்ன காரணம் கூறுகின்றார்?**

"ஞானநெறியைக் கூறும் வேத ஆகமங்களை உணர்ந்துள்ள என் மனம் ஒப்பாது. நீ (குமரவேள்) முன் பிரப்பன் வலசையில் அருளொழுகக் கூறிய தூய திருமொழியும் இடம் கொடாது" என்கின்றார்.

**21. எனவே யாது செய்தல் தக்கது என்கின்றார்?**

துரிய நிலையின் மேலிருந்து வழிபடுதலே அமைவுடைத்து என்கின்றார்.

**22. செய்யுளில் வரும் "அருமலர்" என்பதற்கு உரையாசிரியர் (பி.மா.சோமசுந்தரனார்) கூறும் விளக்கம் யாது?**

வைகைறைப் பொழுதில் நீராடி வாயை ஒரு துணியால் கட்டிக் கொண்டு பூஞ்சோலை புகுந்து நல்ல மணமும் மலரும் பருவமும் உடைய போதுகளைக் கொய்து மாலையாகத் தொகுத்து சாத்தலே முறையானது. ஏனைய வகையில் பெறும் மாலைகள் பயன் தரா என்கிறார்.

**23. செ.4ஐ எழுதுக.**

"ஐயமிலா நின்னுலகு வேண்டி இங்கே
**அருமலர்** நீர் கொடு பூசை புரிவார் போலத்
**தெய்வமெலாம் ஏத்து குக** நானும் யாதோர்
சிற்றுருவில் வழிபடற்குப் பல விகார
வையமிலா **ஞான நவில் நூல்களோர்என்**
**மனம்இசையாது அருள்சுரந்து நீமுன் சொன்ன**
**துய்யவிலாசச் சொலுமேஇடம் கொடாது**
துய்யநிலை மேனின்றே சூழல் சாலும்" (செ.4)

அருமலர் நீர் கொடு பூசை புரிவார்–
"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்" (4.1:6)
என்று திருநாவுக்கரசரும்,
"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு"
(திருமந்திரம், 1828)

என்று திருமூலர் கூறுவதும் இங்கு நினைவுகூரத்தக்கன.

**24. சுவாமிகள் குமரவேளை (செ.5இல்) எவ்வாறு விளிக்கின்றார்?**

என்னை ஆட்கொள்ளும் அருள் நிரம்பிய என் கண்ணே தந்தையாகிய சிவபெருமானுக்கும் பிரணவப் பொருளை அறிவுறுத்திய குருவே" என விளிக்கின்றார்.

**25. செ.5இன் விளக்கம் யாது?**

அடியேன் திருவருள் நெறியைச் சூழேனோ.

அவ்வாறு சூழ்ந்து சூழ்ந்து துரியமாய் விளங்கி இருளறியா ஒளிப்பிழம்பாகிய பேரின்ப வீட்டில் வாழேனோ. இன்ப மேலிட்டால் ஊற்று எனப் பெருகும் கண்ணீரை வடியேனோ. கண்ணீராகிய அந்த ஆற்றில் படியேனோ. ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடைய நின் திருவடிமலரில் வண்டைப்போல் வீழேனோ. நீரில் கரைந்த உப்பைப் போல இருபொருள்கள் என்று சொல்லுதற்கு இடமில்லாத அத்துவித நலம் பெறேனோ. இயல்பாகவே மலத்தின் நீங்கிய ஞானவெளி நடுவில் விளங்கும் உன்னைப் பணியேனோ. (இவை கூடுமாறு அருள் செய்வாயாக என்பது குறிப்பு).

"சூழேனோ திருவருளைச் சூழ்ந்து சூழ்ந்து
துரியமயமாய் நின்று சோதிவீட்டில்
வாழேனோ ஆனந்தமயமான கண்ணீர்
வடியேனோ படியேனோ **மதுரகம்** போல்
வீழேனோ இரண்டறற் நறிதாகேனோ
விமல சிதாகாச நடுவிளங்கும் உன்னைத்
தாழேனோ **எனையாளுங் கருணைக் கண்ணே**
தந்தைக்கு உபதேசம் செய்த சாமீ. (செ.5)

**26. மதுரகம்–வண்டு சுவாமிகள் குமரவேளை எவ்வாறு விளிக்கின்றார்? ('செ.6இல்)**

"கூர்மையான வேலைத் தாங்கிய மெய்ப்பொருளே" என விளிக்கின்றார். (முன்னே–மெய்ப்பொருளே)

**27. பேய் என்றும் நாய் என்றும் தன்னை அழைப்பது ஏற்புடையன ஆகா என்று சுவாமிகள் ஏன் கூறுகின்றார்?**

ஞானிகள் பலரும் உய்திபெறும் தவம் செய்யாத தங்களைப்

பேய் என்றும் நாயென்றும் தாங்களே இழித்து உரைத்துக் கொண்டமையால் எனக்கு அவை ஏற்புடையன ஆகா என்றார்.

**28. தன்னை எவ்வாறு கூறுதல் பொருத்தம் என்கின்றார்?**

அறிவற்றவர்களும் அவலப் பிறவி என்று வைிடும் **"தடிக்கழுதை"** என்று என்னைக் கூறுதலே பொருத்தமாகும் என்கின்றார்.

**29. செ.6ஐக் கூறுக.**

"செய்தவம் ஒன்றில்லாத ஏழையேனைத்
திண்புவியின் மானுடனாத் தெரித்ததன்மாறாக்
**கைதவம்** என்றெண்ணி இழிநாய் பேயென்னக்
கழறிட என்றாலும் அறிவாளர் பல்லோர்
உய்தவம் இல்பேய் நாய் என்றே தம்மைத் தாம்
உரைத்தமையால் அவை பொருந்தா மூடர்தாமும்
வைத வலஞ்சுட்டு **தடிக்கழுதை** என்றே
வழங்கலியை புடைத்து **வைவேல் பரித்த மன்னே"** (செ.6)
(கைதவம்–துன்பம், பொய் வஞ்சனை)

**30. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு விளிக்கின்றார்? (செ.7இல்)**

அரசர்கள் பணியும் இறைவனே! மயில்மேல் எழுந்தருளும் அரசனே! குற்றமற்ற மாணிக்க மலையே என்று விளிக்கின்றார்.

மாணிக்கவாசகரும் இறைவனை "மாணிக்கக் கூத்தன்" (திருப்பொற்சுண்ணம், செ.12) என்றும், "மாணிக்கசோதி" (அதிசயப்பத்து, செ.7) என்றும் கூறுகின்றார்.

**31. சுவாமிகள் குமரவேளின் திருவடியில் தோயும் இன்பத்தை எவ்வாறு வர்ணிக்கிறார்?**

நின் திருவடியில் தோயும் இன்பமானது என் உள்ளத்து இனிய அமுதமாகவும், கற்கண்டாகவும், சருக்கரையாகவும், தேனாகவும், மா பலா வாழை என்னும் இணையற்ற மும்மலச் சுவையாகவும் இனிப்பதாகக் கூறுகின்றார்.

**32. சுவாமிகள் குமரவேளிடம் யாது வினவுகின்றார்?**

ஏழையேன் என்ன தவத்தை இனிச் செய்ய உள்ளேன். தவத்துக்கு ஏற்ற உடல் வன்மை பெறாத பாவியாகிய எனக்கு இவ்வாறெல்லாம் ஏங்கி மீட்டும் மீட்டும் கூறிப் புலம்புமாறே மக்கட்பிறவி வாய்த்ததே அல்லாமல் என்னைப் பாழ் செய்யும் இருவினைகளையும் அழிக்கும் திறன் வாய்க்காதோ? சொல்லியருள்க என்கின்றார்.

**33. செ.7ஐ எழுதுக.**

"மன்னவர்கள் தொழும் மன்னே மயிலூர் மன்னே
        மறுவின்மணி மலையே என் மனத்தினுள்ளே
இன்னமுதாய்க் கற்கண்டாய்ச் சீனி தேனாய்
        இணையறு முப்பழச்சுவையாய் இனிக்க ஏழை
என்னதவம் இனிச் செய்வேன் தவத்திற்கு ஏற்ற
        விகலுடம்பு பெறாப் பாவிக்கு இவ்வாறு ஏங்கிப்
பன்ன மனுவாப் பிறந்த பரிசே அல்லால்
        பாழ்த்த வினைநூறு பரிசிலையோ சொல்லாய்" (செ.7)

**34. செ.8இன் விளக்கம் தருக.**

வேற்பரமனே! மோன முடிபாயுள்ள ஒன்றைச் சொல்லாலே சொல்லியருளிய தக்கிணாமூர்த்திப் பெருமானின் சொல் நெறியில் ஒழுகும் இனியோர் செயலைப் பின்பற்றாத இரண்டு கால் மாடு ஆகிய என்னைப் போல் இருப்பவரும்

உலகில் உண்டோ? எல்லாவிடத்தும் பொல்லாத பெருங் கயவர்களின் குருவாய் மடமை விளங்கும் மக்கட்பதியாய் புழுத்த நாய் போன்றவனாய் ஞாயிறு ஒளி காணாத குருடனாய் இருக்கும் (இறையருளைக் காணாத அறிவுக் குருடனாய்) எனக்கு நீ வழங்கியருளும் இன்பம் எவ்வாறு கிட்டும்? சொல்லியருளுக.

“சொல்லாத சொல்லொன்றைச் சொல்லா மற்றான்
        சொல்குருவின் சொல் நிற்கும் சுகுர்தர் செய்கை
கல்லாத இரண்டு கால்மாடா என்போல்
        காசினியில் நிற்குநரும் உண்டோ யாண்டும்
பொல்லாத பவக்கயவர் குருவாய் மூடம்
        பொலிமனுடப் பதடியாய்ப் புழுத்த நாயாய்
எல்லாபந் தெரியாச் **சிதடனாகி**
        இருக்கும் எனக்கு அயிலோ உன் களிப்பு எங்கு
                                        எய்தும்” (செ.8)

(சிதடன்–அறிவில்லான்; குருடன்)

**35. சுவாமிகள் குமரவேளை எப்படி விளிக்கின்றார்? (செ.9இல்)**

அருட்கடலானவனே! இன்பத் திரளாய் இருப்பவனே! செவ்வேட் பரமனே! செஞ்சுடர் வண்ணனே! இறைவனே! என்று விளிக்கின்றார்.

**36. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?**

கிட்டுதற்கு அரிய பெருநிலையை நின் அடியவர்கட்கு வழங்கும் பேரருள் இந்த நாயேனுக்கும் இரங்குமானால் துன்பங்கள் அழிவுறவும் ஞானநிலையில் நிலைத்து மேம்பட்டோன் ஆவேன். இதனினும் பிறிது யாதும் வேண்டேன். சத்திநிபாதமாகிய அருள் வீழ்ச்சியின்றி உய்திபெற வழியில்லை என்று நூல்கள் கூறுவது வாய்மையுரை அல்லவா? எனவே இன்பம் பொழியும்

அன்பை என்பால் கொண்டருள வந்தருள்க என வேண்டுகின்றார்.

“எய்தரிய பரத்துவம் உன் அடியார்க்கு ஈயும்
இருஞ்கருணை இந்நாய்க்கு இரங்குமாயின்
எய்தரிய நிலைநின்று மேலோன் ஆவேன்
வேறொன்றும் மேல்வேண்டேன் அருளல்லாமே
உய்திபெற வழியில்லை எனல் பொய்யாக்கட்
டுரையன்றோ எப்படியும் உவகை அன்பு
செய்தருள வருதி அருட்கடலே இன்பத்
திரளே செவ்வேளே செஞ்சுடரே தேவே” (செ.9)

நின்தன் வார்கழற்கு அன்பு எனக்கும்
நிரந்தரமாய் அருளாய் நின்னை
ஏத்த முழுவதுமே” (திருச்சதகம், செ.6)

என்று மாணிக்கவாசகர் கூறுவது இங்கு நினைவுகூரத் தக்கது.

**37. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.10இல்)**

தேவே! சிவந்த மணியின் ஒளி வண்ணனே! அண்டமாகிய ஞானவெளியில் விளங்கும் சிவந்த செழுஞ்சுடரே! உள்ளமாகிய ஞானவெளியில் விளங்கும் தாமரை மலாராய் இருப்பவனே! அப்பூவில் எழுந்தருளும் குகனே! என சுவாமிகள் அழைக்கின்றார்.

**38. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?**

நின் அழகிய கடைக்கண் என்னை நோக்காதோ?
நின் தூயமலர்வாய் வா என்று அழைக்காதோ?
நின் திருவடிமலர் என் தலைமேல் நிலையாதோ?
நின்று விளக்கம் செய்யாதோ? இவ்வுலகை மறந்து

சூழ்கின்ற பெருமை கொண்ட துயரமற்ற வீட்டில் என்னை இருக்கச் செய்யாதோ? ஆயின் நுண்ணறிவு வாயாத நான் உய்திபெறும் வழியாது? கூறி அருள்க என்று வேண்டுகின்றார்.

"தேவே செம்மணிச் சுடரே சிதாகாசச்செஞ்
செழுஞ்சுடரே இதய சிதாகாசமேவு
பூவேயப் பூவிலமர் குகனே உன்கண்
பொற்பொடு எனை நோக்காதோ புனித நாத்தான்
வாவே என்று அழையாதோ மலர்த்தாள் சென்னி
மன்னாதோ மின்னாதோ மறந்து சூழ்மா
நோவேயில் புலத்தின் எனை இருத்திடாதோ
நுண்ணுணர்விலா எளியேன் உய்யுமாறே" (செ.10)

**39. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்? (செ.11இல்)**

வேற்பரமனே! உய்திதரும் அருள்நெறி ஏதும் அறியாத பேதையாகிய எனக்கு மெய்யருள் காட்டும் நீ அன்று பிரப்பன்வலசையில் விளக்கிய நிலையை விடுத்து இழிந்த கீழ்மக்களுள் நானும் ஒருவனாகி கவலைப் பெருங்கடலில் வீழ்கின்ற அடியவனின் பொய்யருள் மார்க்கத்தை மாற்றிக் காப்பவர் நின்னையன்றி வேறுயார் இனியுளர்? கூறியருள்க என்கின்றார் சுவாமிகள்.

"உய்யருள் மார்க்கம் ஏதும் உணர்கிலாப் பேதையேற்கு
மெய்யருள் காட்டு நீ தான் விளக்கிய நிலைவிட்டு ஈனக்
கையருள் ஒருவனாகிக் கவலைமா கடலில் வீழென்
பொய்யருள் மார்க்க மாற்றிப் புரப்பவர் இனி யார்
வேலோய்" (செ.11)

**40. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.12இல்)**

வேலவனே! விமலனே! அடியார் வறுமையை அழித்து அருள் செய்யும் வள்ளலே! இவ்வுலக துன்பத்தைத் தொலைத்து ஆட்கொண்டருளும் நல்ல பராபரனே” என்று அழைக்கின்றார் சுவாமிகள்.

**41. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?**

என் துன்பத்தை அறுக்க வந்தருள் என்று ஓலமிட்டுத் துயர்மிக்குக் கண்ணீர் வடிக்கும் என்னைப் பார்த்து **“மகனே! வருக” என்று நின் திருவாய் மலர்ந்து அழைக்கும் பேறும் வாய்க்குமோ? கூறியருள் என்று சவாமிகள் வேண்டுகின்றார்.**

“வேலவா விமலா அன்பர் மிடி துமித்து அருள்வள்ளால் இஞ்
ஞால வாதனை செற்று ஆளுநப்பராபரனே துன்பஞ்
சூலவா எனவே கத்தித் துயர்கணீர் வடியா என்னைப்
பால வா எனவே கூவும் பரிசையும் உறுமோ உன்னா” (செ.12)

**42. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்? (செ.13இல்)**

வேலிறைவனே! உன்னுடைய நலமார்ந்த அருளை வழங்கியருள் வழங்கியருள், மேம்பட்ட வீடுபேறு வழங்கியருள் வழங்கியருள் என்று நான் செய்த விண்ணப்பம் அனைத்தும் நடிப்பே, உன்னை வழிபட்டதும் நடிப்பே. அருளாகிய அன்னையை நாடி நாடி அழுததும் நடிப்பே என்று இப்போது உண்மை கூறும் இப்பாவியேன் பெறவுள்ள பயன் தான் யாதோ? அறிகிலேன். கூறியருள்க என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்” என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் கூறுவது (திருச்சதகம், 90) இங்கு நினைத்தற்குரியது.

“உன் நய அருளை ஈஈ உயர்பதம் ஈஈயென்று
சொன்னசொல் அனைத்தும் போலி தொழுததும் போலி
அன்பாம்
அன்னையை நாடி நாடி அழுததும் போலி என்றே
பன்னும் இப்பாவி எய்தும் பயன் எதோ பகர்வே நாதா” (செ.13)

**43. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ.14இல்)**

“இறைவனே! நாத தத்துவ முடிவில் விளங்கும் ஞானத் தலைவன் என்று உன் திருவடியை நான் நினைத்தது உண்டு. நினது பேரருளை விரும்பிக் கிட்டாத என் தீயூழை நினைந்து தீய கூறும் என் நாவானது அலறும்படி என் மண்டை உடையுமாறு கூரிய இரும்பு கொண்டு அறைந்தேன் இல்லை. தருக்கம் அவாவும் நாவே என் உடம்பெல்லாம் நிறைந்திட உள்ளேன். அந்தோ (என் கதி யாதாய் முடியுமோ).

“நாத விந்து கலாதி நமோ நம
ஞான பண்டித சுவாமி நமோ நம”

என்று அருணகிரிநாதர் திருப்புகழில் கூறுவது செ.14இன் முதலடியோடு ஒப்பு நோக்கத்தக்கது.

“நாத நாதாந்த ஞானநாயகன் முருக என்று உன்
பாதம் நான் நினைந்தது உண்டு பரம உன் அன்பை நேடி
ஏதநாவலற மண்டை இரிய வெஃகடித்தேன் அல்லேன்
வாத நா உடம்பே முற்று மல்கிட நின்றேன் அந்தோ” (செ.14)

**44. சுவாமிகள் குமரவேளை எப்படிப் போற்றுகின்றார்? (செ.15இல்)**

முதலும் முடிவும் இல்லாத பொருள். வீடு பேற்றின்பமும் பாசக்கட்டின் துன்பமும் இல்லாதவன். என் உள்ளத்து விளங்கும் பரமன். வாலறிவன். எல்லாப் பொருளுக்கும்

எஞ்ஞான்றும் உரிமையுடைய தலைவனாய் விளங்கும் சுப்பிரமணியமே என்று சுவாமிகள் போற்றுகின்றார்.

“ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்”
“இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே”
“இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்”

என்ற திருவாசகத் தொடர்களும்,

‘‘மலர்மிசை ஏகினான்’’, ‘‘வாலறிவன்’’ என்ற திருக்குறள் தொடர்களும் இங்கு ஒப்புநோக்கத்தக்கன.

“அந்தமும் ஆதியும்தான் இல்பொருளாகி வீடும்
பந்தமும் இலியாய் என்னுள் பரமா அறிவாய் நாளுஞ்
சொந்தமுமாகி நிற்கும் சுப்பிரமணியமே என்
மந்தமும் வினையும் ஓவ வரமனஞ் செய்யின்
வாழ்வேன்” (செ.15)

**45. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

என் ஊக்கமின்மையும் இருவினைகளும் ஓய்ந்திடுமாறு என்பால் எழுந்தருளத் திருவுள்ளம் கொள்வாயேல் நான் வாழ்வு பெறுவேன் ஆவேன் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

**46. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்? (செ.16இல்)**

சரவணப் பொய்கையில் தோன்றிய முத்தே! அடியார் பெறும் வாழ்வு கிட்டாதவன் ஆகிய நான் (பிரப்பன் வலசையில் பேறு பெற்றது போல்) மேலும் ஒருமுறை நின் மலர் போன்ற திருவாய் மொழியைக் கேட்கப் பெறின் யாதொரு தாழ்ச்சியும் இல்லாதவன் ஆவேன். இருளாகிய ஆணவமல நீக்கத்தும், துன்பக் கேணியாய் உள்ள இந்த உடம்புசுமை நீக்கத்தும் எளியேனைத் திருவடியில் வைத்து நான் பரத்துவம் பெறுமாறு அருள் வழங்க நீ நினைத்தல் வேண்டும்.

“வாழ்விலேன் எனுமோர் காலுன் வாய்மலர் மாற்றம் கேட்கின்
தாழ்விலேன் ஆவேன் நாளுஞ் சரவணமுத்தே நீலம்
போழ்விலே இடுக்கணே சால் புரையுடல் சுமையின் நீக்க
வீழ்விலே எனைத்தான் வைத்து மேவ நீ நினைத்தல்
வேண்டும்” (செ. 16)

**47. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்? (செ.17இல்)**

இருவினை விலங்கைத் தறித்து ஆட்கொள்ளும் சேந்தனே! வீடுபேற்றை அடியவர்க்கு அருளும் ஞானப் பெருவெளியே! நின் திருவடியை எண்ணும் அடியார்கள் எண்ணத்தில் நின்று அவர்கள் எண்ணத்தை முற்றுப் பெறச் செய்யும் எந்தாய்! உன்னைப் பரம்பொருளாகிய முதல்வன் என்று ஏற்றுக் கொள்ளாதார் பகைவரே ஆவர். அன்னோர் நட்பு பரமாணு அளவு கூட என்னைத் தீண்டாதவாறு காத்தருள்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“நினைப்பவர் நினைப்பினின்று நினைப்பது முடிக்கும்
எந்தாய்
உனைப் பரம் எனக் கொள்ளாதார் ஒன்னலர் அவர்கள்
நேயம்
எனைப் பரமாணுவேனும் மெய் தொணாவாறு காத்தி
வினைப் பரிசறுத்து ஆள்சேந்தா வீடுபேற்றருள்மா
விண்ணே” (செ. 17)

‘‘மனத்துள் நின்ற கருத்தாகைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னை” (6: திரு ஆலவாய் திருத்தாண்டகம், செ.8) என்றும் “மனத்திருந்த கருத்தறிந்த முடிப்பாய் நீயே” (6: திருவையாறு திருத்தாண்டகம், செ.3) என்றும் திருநாவுக்கரசர் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கன.

**48. சுவாமிகள் குமரவேளிடம் (செ.18) என்ன வேண்டுகின்றார்?**

எல்லாப் பொருளுக்கும் மூலமான ஒப்பற்ற முதல்வனே! முருகவேளே! தேவர்கள் பலரும் நம்பும் அவரவர் உலகச் செல்வங்களினும் மாட்சிமைப்பட்டது குளிர்ந்த மலர் போன்ற நினது வன்மை சான்ற திருவடிப்பேறு உண்மையை நான் நன்கு உணர்ந்தேன். ஆதலால் வாழ்நாளை வீண் நாள் செய்து பல தெய்வங்களையும் வழிபடும் உலகத்தார் நடையை நான் மேற்கொள்ளும் வழியில்லை. என் உள்ளக் கோயிலினுள் இன்ப நடனம் ஆடியருள்வாயாக என்று சுவாமிகள் வேண்டுகின்றார்.

"விண்ணவர் பல்லோர் நம்பும் வெறுக்கையின்
அறிதாம் உன்றன்
**தண்ணலர் நோன்றாள்** என்னும் சரதநன்கு உணர்ந்தேன்
வாளா
மன்னவர் நடை நான்கொள்ள வழியிலை இனி உட்கோயில்
உண்ணடம் இழைத்தி ஆதிஒருவனே முருகவேளே" (செ.18)

**தண்ணருள் நோன்றாள்** –குளிர்ச்சியான மலர் போன்ற வலிமை வாய்ந்த திருவடி. **"செம்மலர் நோன்றாள்"** என்று மெய்கண்டார் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

**49. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.19இல்)**

மணம் பொருந்திய கலவைச் சாந்து தோய்ந்த அரும்பிய முலைகளை உடைய குறத்தியான வள்ளிப்பிராட்டியை விரும்பும் எந்தாய்! விரித்தலும் சுருங்குதலும் உடைய படத்தையுடைய பசிய பாம்புரி ஒத்த ஆடையும் அணிகளும் அணிந்து இடப்பக்கம் அமரும் தெய்வயானைப் பிராட்டி திருவுள்ளம் மகிழும் தலைவனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**50. சுவாமிகள் என்ன கூறுகின்றார்?**

வள்ளிப்பிராட்டி தெய்வயானை இவர்களுடன் எழுந்தருளும் இன்பார்ந்த நின் கொலுவைக் கண்டாலும் கொடியேனாகிய என் குறை தங்காது நீங்கிவிடுமே என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"முருகுறு களபந் தோயு முகிழ்முலைக் கொடிச்சி எந்தாய்
உருகுறு படப்பைந்நாக உரிபுரை உடை பூண்வீக்கி
அருகுறு தெய்வத் தந்தி அகமகிழ் தலைவா உன்றன்
குறுகுறு கொலுக்கண்டாலும் கொடியனேன் குறை
நில்லாதே" (செ.19)

**51. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ. 20)**

தேவனே! சிவனே! வேலிறைவனே! அளவில்லாத துயரமுறுபவன் ஆனேன். ஞானக்கருத்தை உணர்கிலேனே! இத்துணை வறியவனான என்னைப் பாரத்து நீ, "வருந்துவனே! அஞ்சேல்!" என்று ஒரு குளிர்ந்த மொழி அருள்வாயானால் மகிழ்ச்சி அடைவேன். நின் திருவருட் குறிப்பு யாதோ? அறிகிலேன் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"தேவனே சிவனே வேலின் தெய்வம் வரம்பில்லாத
நோவனே யானேன் ஞானநோக்கம் அதுஅறியேன் நீ தான்
தாவனே அஞ்சேல் என்னோர் தண்ணுரை அளித்தால் இன்பன்
ஆவனே அருளின் நோக்கம் அறிகிலேன் மிடியனேனே".
(செ.20)

**52. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.21)**

இயல்பாகவே பாசததின் நீங்கிய பெருமானே! அருளாகிய கோயிலில் எழுந்தருளும் குமரநாதா என்று அழைக்கின்றார்.

**53. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

வறுமையற்ற நினது அடியவர் நுகரும் பெருவாழ்வை அடைய வேண்டி இவ்வுலகத்தில் பிறந்து அடிகள் இல்லாத மடமை பொருந்திய பேயை நிகர்த்து (நின் திருவருள் கிட்டாமையால் உள்ளம் பெரிதும் வருந்தித்) தரையில் புரண்டு உருண்டு அழுமாறு என்னை விடுத்து யாதொரு குற்றமும் தீண்டாத அருள் நிரம்பிய நின் திருவுள்ளம் மோனமுற்று இருப்பது ஏன்? நீ எழுந்தருளியுள்ளது சிவப்பேறு பெற்றோர் வாழாத உலகோ என்றால் அதுவும் இல்லையே. (ஆயின் நின் மோனத்துக்குக் காரணம் யாதோ. கூறியருள்) என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"மிடியில்லா நினது அடியர் பெருவாழ்வு
    பெறுமாறு விபுலை தோன்றி
அடியில்லா மடப்பேய் ஒத்து அவனிமிசை
    உருண்டு அழுமாறு அமல உன்றன்
செடியில்லா அருளுள்ள மவுனமதுற்று
    இருப்பது என்கொல் சிவப்பேறுள்ளார்
குடியில்லா நகரோ நின் இருக்கை அருட்
    கோயில் வளர் குமரநாதா" (செ.21)

**54. சுவாமிகள் எவ்வாறு தன்னைத்தான் தாழ்த்திக் கூறுகின்றார்?**

குமரகுருதாசன் என்று பெயர் கொண்ட இவன் நல்ல குணம் இல்லாதவன். நல்ல அறிவில்லாதவன். குற்றங்கட்கே இருப்பிடமாய் உள்ளவன். (எனவே இவன் திருவருளுக்கு உரியன் ஆகான். இவன் தேவருலகமேனும் அடைவோனா எனில் அதற்குரிய அறச்செயல்கள் செய்யாதவன். (ஆகவே இவன் துறவியும் பிறவியும் வீணேயாம்) என்று மக்கள் யாவரும் கூறுவதற்காகவா சுற்றத்தையும், அன்னையையும், மனைவியையும், மற்று உள்ள யாவற்றையும் துறந்து

இங்ஙனம் தனிமை ஆனேன். குற்றம் நிரம்பிய நான் உய்திபெறும் வழி யாதோ. அதை அறிகிலேனே என்று சுவாமிகள் தன்னைத் தாழ்த்திக் கூறுகின்றார். (அருளாளர்கள் மக்களில் சிலரின் பண்புகளைத் தம்மேல் ஏற்றிக் கூறுவது மரபு).

குமரகுருதாசன் இவன் குணமில்லான்
அறிவில்லான் **கோதை**யுள்ளான்
அமரருலகினும் உய்ய அறமில்லான்
என மனுடர் அறைவதற்கோ
தமரரிய தாய் மனை மற்றெல்லாம் விட்டு
இங்ஙனமே தனியனானேன்
**சமரவயில்** பிடித்த தலைவா பிழைக்கு
மாறறியேன் **சழக்கனேனே"** (செ.22)

**55. கோதை என்றன் சொல்லின் பொருள் யாது?**

கோதை–குற்றம், கோதையுள்ளான் – குற்றம் உடையான்.

**56. சமரவயில் பொருள் விளக்கம் தருக.**

வெல்வது வேல். ஏனைய எல்லாப் படைகட்கும் தலைமை பெற்றது. "எப்படைக்கும் நாயகமாவதொரு தனிச்சுடர் வேல்" என்பது கந்தபுராணம். எனவே **"சமரவயில்"** என்று அருளினார்.

**57. சழக்கனேன் என்பதன் பொருள் யாது?**

சழக்கு என்பது குற்றம்,பொய், சழக்கன்–குற்றம் உடையோன்.

**58. சுவாமிகள் இன்றுவரை உயிரோடிருப்பதற்கு என்ன காரணம் கூறுகின்றார்?**

குற்றமற்ற நினது திருவடித் தாமரைகள் வாய்க்காத குறையினால் கவலையானது ஞானப் பயிற்சியுடைய எனது

உடலையும், உயிரையும் பிடுங்கித் தின்னுகின்ற பருந்தாக முடிந்தது. ஞானமரவின் அறம் தங்காதார் கருதற்கு ஒண்ணாத பரம ஆரமுதமான இளம்பூரணனே! **உன்னை இழந்திடத் துணியாத அறிவு ஒன்றினாலேயே இன்றுவரை உயிரோடு இருக்கின்றேன்** (அருள் செய்வாயாக) என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“சழக்கறும் உன் அடிக்கமலம் வாயாமை
  யால் கவலை தானே ஞானப்
பழக்கமுறும் எனை உயிரோடும் பிடுங்கித்
  தின்னுகின்ற பருந்தாயிற்றால்
வழக்கறமிலார் கருதொணாப் பரம
  ஆரமுத மழவே **உன்னை**
**இழக்க அறியாமதி ஒன்றால் உயிர்பெற்று**
  **இருக்கின்றேன்** இன்றுகாறும்” (செ.23)

## 59. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ. 24)

அழிவில்லாத திருச்சிற்றம்பலத்து எழுந்தருளி நடனம் செய்யும் ஒப்பற்ற சிவபெருமான் அருளிய மகனே! என் அறிவே! மெய்ப்பொருளே! என் நெஞ்சக் குன்றின் மேல் தங்கி ஒளிரும் குமரகுருவே! என்று அழைக்கின்றார்.

## 60. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?

இன்றைக்கு இருப்பாரை நாளைக்கும் இருப்பார் என்று என்னவே திடமில்லாத நிலையற்ற வாழ்வில் இன்னும் இருப்பதற்கு என் உள்ளம் நினையாது. தீவினைகளை அழித்து நின்னை அடைய நினைந்துள்ளது. அருள் செய்வாக என்று சுவாமிகள் வேண்டுகின்றார்.

**“இன்றிருந்து நாளைஒழி பொய் வாழ்வில்**
  இனும் இருக்க எனது நெஞ்சக்

குன்றிருந்து மிளிர் குமரகுருவே இந்
நெஞ்சு நினையாது கோது
கொன்றிருந்து நினையடைய நினைந்துள்ளது
அவ்வாறு குயிற்றாய் கோணை
மன்றிருந்து நட நவிற்றும் ஒருவன் அருள்
மதலாய் என் மதியே மன்னே" (செ.24)

**61. "இன்றிருந்து நாளை ஒழிபொய் வாழவு என்பதற்கு இலக்கியத்திலிருந்து ஓர் எடுத்துக்காட்டு தருக.**

"நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு" (குறள், 336)

என்று வள்ளுவர் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

**62. சுவாமிகள் குமரவேளை எப்படி அழைக்கின்றார்? (செ.25)**

நிலைபெற்ற வேத முதல்வனே! என் தலைவனே! கண்மணியே! சிவந்த மணிவண்ணனே! நெருங்கிய தோகையுள்ள மரகத மயிலிலும், பொன்மயிலிலும், வெண்மயிலிலும் சிவந்த மேருமலை போல எழுந்தருளும் துரையே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**63. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?**

இருள் கலப்புடைய என் அறிவை வாலிய அறிவதாக்கி உனது பொன்போன்ற திருவடிக்கீழ் அமர்ந்திருக்கும் பேறு வாளா ஊர் முழுதும் ஓடித்திரியும் புழுத்த நாய் போன்ற எனக்கும் கூடுமோ சொல்லியருள்க என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"மன்னுமறை முதலே என் முதலே கண்
மணியே செம்மணியே தூவி
துன்னு மரகத மயிலில் பொன்மயிலில்
வெண்மயிலில் துவரா மேரு

என்ன வரு துரையே என் குறையறிவை
நிறையறிவதாக்கி என்றும்
பொன்னடியில் இருக்கவும் பொற்புளதோ சொல்
லூர் திரியிப் புழுத்த நாய்க்கே” (செ. 25)

**64. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.26இல்)**

உயிர்களின் உள்ளக் குகைதோறும் பொருந்திய குகன் ஆகிய மகாதேவனே என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**65. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?**

உடம்பு முழுவதும் புழுத்துக் கண்ட இடமெல்லாம் அலைகின்ற நாய்க்கேனும் புலாலைத் தின்னும்போது சந்தோஷம் உண்டாகும். குற்றங்களின் தலைமைப் பீடமான இந்த நாய்க்கு இவ்வுலகில் எது பொருந்தும் எனில் துயரமே பொருந்தி நிற்கும். மேலும் எமன் என்னைக் கழுவின் முனையில் இட்டு மிதிப்பானாயினும் (அத்துன்பம் பொறுக்க மாட்டாமல்) அதுகாறும் நின் திருவடியை நினையாதிருந் தமையை எண்ணி அழுவேன். (அதுவும் நிகழ்வதாகத் தெரியவில்லையே) ஒறுப்பார் இல்லாமல் கொழுத்துத் திரிகின்ற உயிர்களுக்கு இத்தகைய ஒறுப்பேயல்லாமல் வேறு நற்பயனும் கிட்டுமோ கூறியருள்க என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“புழுத்தலையு நாய்க்கும் விடக்குண் பொழுதோர்
சந்தோடம் பொருந்தும் இந்த
வழுத் தலைமையுடை நாய்க்கு இங்கு எது பொருந்தும்
துயர்பொருந்து **மறலி** மேலும்
கழுத்தலையில் இருத்தி மிதித்தாலும் உனை
நினைந்து அழுவல் கழல் எண்ணாமை

கொழுத்தலையும் உயிர்க்கு இனைய பலனன்றி
வேறுளதோ குகமாதேவே" (செ.26)

மறலி–எமன்.

**66. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ.27இல்)**

திட்பம் உடைய வேல் கொண்ட மழவனே! தெய்வநெறி என்பது பொய்யாகிக் கழிந்து உலக வாழ்வு ஒன்றையே கருதும் உளங்கொண்டு மண், பெண், பொன் ஆகிய மூன்றைத் தேடும் நடையே மெய்யாகி நல்லொழுக்கம் பொய்யாக்கிக் கழிந்து தீவினைப் பயிற்சியே மெய்யாகித் தவம் முயல்வோர் பிறத்தல் அரிதாகி கொடியவரே எங்கும் பெருகிக் காம ஒழுக்கமே பெருகும் இந்தக் கலிகாலத்தில் நின் அருளை நாடும் உயிராகிய அடியவன் பிறந்து அலைவது முற்பிறவியில் நான் தவம் புரியாக் குறையையே காட்டுவது ஆகும் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"தேவநடை பொய்யாகி உலகநடை
மெய்யாகிச் சீலம் பொய்யாய்ப்
பாவநடை மெய்யாகிப் படிவர் வர
அரிதாகிப் பதகர் மிக்கே
ஆவநடை பெரிதாகி உள இந்தக்
கலிகாலத்து அருணாடிந்தச்
சீவனடை முன் தவமிலாத குறை
வேயாகும் திணிவேற்காளாய்" (செ. 27)

**67. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ.28இல்)**

நல்லோர் போற்றும் அருளுடைய இளம் பெருமானே! எங்கும் செறிந்த நின் திருவருள் எளியேன் பால் இரங்க வில்லையே என்று என் தலையில் அறைந்து கொண்டு புலம்பித் திரிந்தேன் அல்லேன். உள்ளத்தில் எழும்

இரக்கத்தோடு என் முகத்தில் அறைந்து கொண்டு அழுதேன் அல்லேன். தரையில் விழுந்து அழுதேன் அல்லேன். நின்னைத் தொழும் அன்பு பெருக நிலத்தில் கட கட எனப் புரண்டு அழுதேன் அல்லேன். கல் நெருஞ்சுடைய நான் இவ்வாறு அல்லேன் அல்லேன் என்று சொல்வதையே தொழிலாகக் கொண்டுள்ளேனே.

"திணி கிருபை இரங்கவிலை என்று தலை
யடித்து அழுது திரிந்தேன் இல்லை
அணி கிருபையோடு முகத்தில் அறைந்து அழுதே
னில்லை விழுந்து அழுதேன் இல்லை
பணி கிருபை உடல் நிலத்தில் கடகடெனப்
புரண்டு அழுது பதைத்தேன் இல்லை
கணி கிருபையுடைய இளம்பெரும இவ்வாறு
இயம்புற்றேன் கன்னெஞ்சேனே" (செ.28)

"தவமே புரிந்திலன் தண்மலர் இட்டு
முட்டாது இறைஞ்சேன்" (திருச்சதகம், செ.5)
"ஆம் ஆறு உன் திருவடிக்கே அகம்
குழையேன் அன்பு உருகேன்
பூமாலை புனைந்து ஏத்தேன்
புகழ்ந்து உரையேன் புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில் தூகேன்
மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே" (திருச்சதகம், செ.14)

என்று மாணிக்கவாசகர் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கன.

**68. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகிறார்? (செ.29இல்)**

வலிய வேல் கொண்ட இறைவனே! கல்லை ஒத்த இந்த

நெஞ்சோடு நான் ஏன் பிறந்தேனோ? கீழ்மகனிலும் கீழ்மகன் இவனே என்று பற்றற்ற பெரியோர்கள் கூறும்படி இழிவு கொண்ட இந்த நெஞ்சோடு நான் ஏன் பிறந்தேனோ? புண்ணியம் ஒன்றும் இல்லாத பொல்லாதவனாகிய எனக்கும் தூய நெஞ்சோடு பொருந்தும். நிட்டையை அருள் செய்வாயோ? அந்நிட்டையின் கண் நீ எழுந்தருளி நினது திருவடித் தாமரையை என் உள்ளத்தில் விளங்க அருள் புரிவாயோ? சொல்லியருள் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"கன்னெஞ்சோடு ஏன் பிறந்தேன் கடையவரில்
கடையன் எனக் கடந்தோர் கூறப்
புன்னெஞ்சோடு ஏன் பிறந்தேன் புண்ணியம் ஒன்று
இல்லாத பொல்லேனுக்கும்
நன்னெஞ்சோடு அமருநிட்டை நல்குவையா
அங்கணெய்தி நளினபாதம்
என் நெஞ்சோடு இருக்க அருள் செய்வாயோ
சொல்லிகல் வேலிறையே அன்றே" (செ.29)

**69. சுவாமிகள் குமரவேளை எப்படி அழைக்கின்றார்? (செ.30இல்)**

இறையவன், எம்மான், குமரன் என்று புகழ்ந்த அருண கிரிநாத முனிவரின் ஈசா, கந்தா, வேதமுதல்வா என்கின்றார்.

**70. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?**

நின் கழலணிந்த திருவடியை நம்பிய நான் ஐம்புலன்களிடம் சிக்கி அழுக்குடையவன் என்று ஆகாத வண்ணம் என் உடற்சுமையை இறக்கி காத்தருள். நான் இனி உலகப் பற்றைச் சிறிதும் வேண்டேன். என்னை அறிவு வண்ணமாய் அமரச் செய்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"இறையவன் எம்மான் குமரன் எனப் புகழ்ந்த
அருணகிரி ஈசா கந்தா

மறையவன் உன் பூங்கழலை நம்பிய நான்
கருவிகளின் வயப்பட்டு ஓவும்
கறையவன் என்று ஆகாது என் உடற்சுமையை
இனிது இறக்கிக் காத்து ஞானத்
துறையவனை ஒல்லை இனில் இனி வேண்டேன்
ஒரு சிறிதும் உலகை தானே" (செ.30)

**71. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.31இல்)**

சூரபன்மன் முதலிய அசுரர் கூட்டத்தை அழித்து தேவர்களின் பரந்த உலகை தேவர்கட்கு வழங்கியருளித் தேவதேவனாய் விளங்கும் மலர்ந்த ஆறு திருமுகங்கள் கொண்ட முதுபதியே என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

"பழனி மலை மேல் வீற்றருளும் வேலா
அசுரர் கிளை வாட்டி மிக வாழ
அமரர் சிறை மீட்ட பெருமாளே" (திருப்புகழ்)

என்று அருணகிரிநாதர் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

**72. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?**

ஒன்பது மணிகளையும் பரல்களாகக் கொண்ட கழலணிந்த திருவடியால் செய்யும் நடனத்தைக் காணும் தெய்வ விழி பெறும் பேறில்லாத பேயனாகிய நான் மனிதன் என இருந்து கொண்டு பாடும் என் பாடலையும் ஒரு பொருளாகக் கருதி வந்து அருள் புரிவாயோ? கூறியருள் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"தானவர் குழுவைச் சவட்டி விண்ணவர் தந்
தட விசும்புலகு அவர்க்கு அளித்து
வானவர் முதல்வனாய் ஒளிர் ஆறு
மலர்முக முதுபதியே நின்

கானவ மணியங் கழல் நடம் காணக்
　　கண்பெறு பாக்கியம் இல் பேய்
மானவன் என இங்கிருக்கும் என் பனுவன்
　　மதித்து வந்து அருள்புரிவாயோ” (செ.31)

என்று சுவாமிகள் கூறுகின்றார்.

**73. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.32இல்)**

அருள் ஒழுக்கமுடைய நல்லோர்க்கு இனிய அருளை வழங்கும் முதல்வனே! ஞானவடிவாய் அருள் தங்கிய சிவக்கொழுந்தே! தெய்வமே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**74. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?**

மயக்க நெறியைப் பற்றி உழலும் எனக்கு நினது மாண்புடைய அருள் கூடாத வறுமையை அடிக்கடி எண்ணி இருளாகிய நெறியைத் துணை பற்றி உழலும் பேய் எனக் கூறும்படி செய்த என் விதி வலிதாயின் ஞானறெியைப் பற்றி நான் வாழ்நதிடுவேனோ? என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கின்றேனே. அருள் புரிவாயாக என்று சுவாமிகள் வேண்டுகின்றார்.

“அருள்நெறியார்க்கு இன்னருள் தரும் ஆதி
　　அற்புத அருட் சிவக்கொழுந்தே
மருள் நெறியேனை மாணருள் மருவா
　　வறுமையை அடிக்கடி நினைந்தே
இருள்நெறி உழலும் பேய் எனச் செய்த
　　என் விதியினும் வலிதாயின்
தெருள்நெறி பிடித்து வாழ்ந்திடுவேனோ
　　தெய்வமே செய்வது ஒன்றறியேன்” (செ.32)

**75. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.33இல்)**

மயக்கும் வினைகளை அழிக்கும் வேற்படை அரசே என அழைக்கின்றார்.

**76. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?**

அறிவை அறிந்தோர் நெறியைப் பற்றாமலும், நீ அருளிய மொழியைப் பற்றாமலும், என்பால் செறிந்துள்ள வினைகளை அறுக்கும் நின் ஆறெழுத்து மந்திரத்தை ஓதாமலும், கால்கள் இல்லாமலே கண்ட இடம் எல்லாம் திரிகின்ற மனத்தின் வேரைக் களையாமலும், ஐம்பொறிகள் தொழிற்படுதலைக் கெடுத்த பெரியோர்களைப் போல பலப்பல கூறி வாயால் புலம்பவும், உள்ளத்தால் கலங்கவும் ஆனேன். நின்னுடைய அழிவற்ற திருவருட் செயல் யாதோ அறிகிலேனே. கூறியருள்க என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“அறிவினை அறிந்தார் நெறியில் நில்லாமே
அருள்மொழிதனைப் பிடியாமே
செறிவினை அறுக்கும் **மனுச்** செவியாமே
திரிமனக் கால் களையாமே
பொறிவினை கெடுத்தார் போல் பல வாயால்
புலம்பவும் கலங்கவும் ஆனேன்
வெறிவினை முருக்கு மயிலரசே உன்
மெய்யருட் செயல் அறியேனே” (செ.33)

**77. மனு என்பதன் பொருள் யாது?**

மனு என்பது ஆறெழுத்து மந்திரத்தைக் குறிக்கும்.

**78. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.34இல்)**

சிவந்த இளமுனிவனாகிய தண்டாயுதபாணியே என்று அழைக்கின்றார்.

**79. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

“ஏனிஙன் மிகவும் வருந்துகின்றனை வா
என்னுழை என உனது அருணாத்
தானிஙன் உரைக்கின் அதுவெனுள் அமுதாய்த்
ததும்பி என் **கம்பலை** செறுத்துத்
தேனினும் **மதுரவட்டினும்** சுவைசெய்
தீங்கரும்பினும் இனிது இனித்து
வானினும் உயர் பேறளிக்கும் அன்றோ செம்
மழமுனியே அருளாயோ” (செ. 34)

**80. கம்பலை என்பதன் பொருள் யாது?**

கம்பலை என்பது துயரத்தைக் குறிக்கும்.

**81. மதுரவட்டி என்பது எது?**

மதுரவட்டி – சர்க்கரை

**82. முற்கூறிய செய்யுளின் (செ.34) பொருள் யாது?**

சிவந்த இளமுனிவனாகிய தண்டாயுதபாணியையே! நீ இவ்வாறு பெரிதும் வருந்துதல் ஏன்? நீ என்பால் வா என்று அருள் நிரம்பிய நின் திரு பவளவாய் திறந்து இப்போது எனக்குக் கூறியருளினால் அம்மொழி என் உள்ளத்தே அமுதமாய் நிறைந்து தளும்பி என் துயரை ஒழித்துத் தேன், சருக்கரை, இனிய கரும்பு இவற்றை விட இனியதாகத் தித்தித்து வானுலகத்தினும் உயர்ந்த பேற்றை அளிக்கும் அல்லவா? நீ அவ்வாறு கூறி எனக்கு அருளமாட்டாயா என்று சுவாமிகள் கூறுகின்றார்.

**83. சுவாமிகள் குமரவேளிடம் மனஒழுக்கம் எப்போது நிகழும் என்ற வினவும் பாடலின் (செ.35) கருத்தை விளக்குக.**

மனமானது நனவிலேயே ஓய்ந்து அடங்கும் வரை ஓய்வு இல்லாத பிறவித் துயர் தொடரும் என்பதை அரிய வேதாகம ஆராய்ச்சியற்ற மக்கள் அறிவார்களோ? அறியமாட்டார்கள். அப்படிப்பட்ட மக்களுள் ஒருவனாக நாயேன் பிறவி இருக்குமானால் மனம் அடங்கல் பற்றி உள்ளம் வருத்தமுறாத நலத்தையேனும் பெறுவேன். (ஆனால் வேதாகமப் பயிற்சி உடையவன் ஆதலால் வருந்து கின்றேன்). இவ்வருத்தத்திற்குக் காரணமாய மனஒழுக்கம் சேய்ப் பரமனின் வருகையால் நிகழும் என்றாய். அவ்வருகை எப்போது நிகழும்? (இப்பிறவியிலா அடுத்த பிறவியிலா அறியேன்). ஆயின் எனது இந்தப் பிறவியால் பெறும் நலம் யாதோ? என்று சுவாமிகள் குமரவேளிடம் வினவுகின்றார்.

“ஓய்வரு பிறவித்துயர் மன நனவில்
ஓயுமட்டு உளதெனல் அருநூல்
ஆய்வறு மனுடர் அறிவர்கொலோ வன்
னவர்களுள் ஒருவன் என்றிட விந்
நாய் வர விருப்பினுங் கருத்து அழுங்கா
நலத்தினையேனும் முற்றொழியுஞ்
சேய் வரவினில் அஃது ஓயும் என்றாய் இச்
**செனிப்பினுக்கு** எந்நலம் உளதே” (செ.35)

செனிப்பு–பிறப்பு

**84. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்? (செ.36இல்)**

உள்ளமாகிய குகையில் என் மனத்தை நிறுத்தி உன்னையே நினைந்திருந்தேன். இன்ப துன்பங்கட்கு இடமாய உலகம்

மறைதலைக் கண்டேன். இன்ப நிலையில் உள்ளம் சிறிது இருக்க அதன்மேல் இருளோடு கூடிய மனது மீண்டும் முளைக்கவும் ஆகும். என் இடருறு கதியை நன்கு உணர்ந்து சிவந்த நூற்றிதழ்த் தாமரையை ஒத்த உனது கழலணிந்த திருவடியை என் தலைமேல் சூட்டுதற்கு வேற்படை கொண்ட பெருந்தகையே இரங்கியருள்க என்று சுவாமிகள் வேண்டுகின்றார்.

"உளக்குகை தனில் என் மனத்தினை நிறுவி
        உன்றனை நினைந்திருந்தே இவ்
வளக்கரை மறையக் காணிடத்து இன்பா
        அகஞ் சிறிது இருப்பவு மேலே
களக்கறை மனது முளைக்கவுமாம் என்
        கதியை நன்கு ஓர்ந்து செந்நூறு
தளக் கழல் எனது தலைமிசைச் சூட்டத்
        தயவுசெய் வேற்பெருந்தகையே!! (செ.36)

**85. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்? (செ.37இல்)**

வேல் விளங்கும் திருக்கையுடைய அரசே! அடியவர் மனமாயிருந்தருள் புரியும் அழகிய அருட்கடலே! உனது திருவுள்ளக் குறிப்பை ஏழையேம் எவ்வாறு அறிவேம். இவ்வுலக நினைவாகி அதனால் துன்பம் அடைந்து இங்கு உழலும் அறிவிலியாகிய என்னை நலமுறச் செய்ய உன் திருவருள் கருதுமாயின் அடியேன் ஒரு நொடியில் அமுதமான உருவாய் விடுவேனே. அருள்புரிக என்று சுவாமிகள் வேண்டுகின்றார்.

"பெருந்தகையா உன் நாட்டம் என் அறிதும்
        பேத இம்மேதினி உணர்வாய்
வருந்தகை நோயு முற்றிவண் உழலு
        மடன் எனை நலஞ்செயவென உன்

அருந்தகை அருள் எண்ணிடின் ஒரு கணத்தே
அமுதுருவாயிடுவேன் வேல்
இருந்தகை அரசே அடியவர் மனமாய்
இருந்தருள் கருணையங்கடலே" (செ.37)

**86. சுவாமிகள் குமரவேளிடம் (செ.38இல்) என்ன வேண்டுகின்றார்?**

ஆழமான கடலினும், உயர்ந்த மலையினும், ஞாயிறு, திங்கள், விண்மீன் ஆகியவற்றினும் விளங்குகின்றாய். வானத்தும், காற்றினிடத்தும் விளங்குகின்றாய். வலிமை யான வேலுடைய முதல்வனே! என் உள்ளக் குகையில் நீ அடைய வேண்டிய நாள்தோறும் புலம்பி உடலும் உயிரும் வருந்தாக் கன்னெஞ்சனான நான் இவ்வுலகில் உயிரோடு உலவுதலும் நலம் தருமோ? சொல்லியருள் என்று சுவாமிகள் குமரவேளிடம் கூறுகின்றார்.

"கடலினும் இருந்தாய் மலையினும் இருந்தாய்
**கதிர்மதி உடு**வினும் இருந்தாய்
கெடலறு **விசும்பு வளி**யினும் இருந்தாய்
கெழு உயிர்த் திரள்தோறும் இருந்தாய்
அடலயின் முதல்வா உள்ளிடத்து உனைநன்கு
அடைய என்று அனுதினம் **கலுழ்ந்தே**
உடலுயிர் வருந்தாக் கடிய நெஞ்சேன் இங்கு
உயிருடன் இருப்பது நலமோ" (செ.38)

**87. கதிர் மதி உடு என்பதற்குப் பொருள் யாது?**

கதிர்–சூரியன். மதி–சந்திரன், உடு–விண்மீன் (நட்சத்திரம்).

**88. விசும்பு, வளி என்பதன் பொருள் யாது?**

விசும்பு–வானம். வளி–காற்று.

**89. கலுழ்ந்தே என்பதன் பொருள் தருக.**

கலுழ்ந்தே – புலம்பி.

**90. சுவாமிகள் (செ.39இல்) குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

எனக்கு நன்மை செய்தவருக்கும் கொடிய தீங்கு செய்தேன். ஞானநூல் வல்லாரை இகழ்ந்து பழித்தேன். தருக்கிப் பேசும் கயவர் உள்ளம் இனிப்பவற்றைச் செய்தேன். எண்ணற்ற உயிர்களைக் கொன்றேன். பொய்யுரைகள் பலவற்றைக் கூறினேன். களவு செய்தேன். தீயவை அழித்தருள் செவ்வேளே! இத்துஜணப் பாவியாகிய நான் உன் திருவடியே துணையென்று இங்கு வந்துள்ளேன். (எனக்கும் அருள்புரிவாயா) கூறியருள்க என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"நலம் இழைத்தவர்க்கும் கொடுவினை இழைத்தேன்
ஞானநூலாளரைப் பழித்தேன்
மலமொழிக் கயவர்க்கு இனியன செய்தேன்
வளருயிர் எண்ணில வதைத்தேன்
**கலம்இழைத்திடு** பொய்யுரை பல உரைத்தேன்
**கரவடத் தொழில்**களும் செய்தேன்
**சலம்** அழித்து அருள் செவ்வேள் எனும் இறையே
தாள் உனை என இங்ஙன் போந்தேன்" (செ.39)

(உலகிலுள்ள சில மனிதர்களின் செயல்களைச் சுவாமிகள் தம்மேல் ஏற்றுக் கூறுகின்றார்)

**91. "கலம் இழைத்திடு" என்பதன் பொருள் யாது?**

பகைமை விளைக்கும் என்று பொருள்படும்.

**92. கரவடத் தொழில் என்பது யாது?**

களவுத் தொழிலைக் குறிக்கும்.

**93. சலம் என்பது இங்கு என்ன பொருள்படும்?**

தீயவை என்று பொருள்படும்.

**94. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு விளிக்கின்றார்? (செ.40இல்)**

ஒளிபொருந்திய வேல் ஏந்திய பரமகுரு மணியே! என் இதய தாமரையில் வளரும் சூழொளி விளக்கே! என விளிக்கின்றார்.

**95. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ.40இல்)**

கழிந்து போகும் துயரத்திற்கும் அஞ்சுகின்றேன். ஊனுடம்பில் வரும் நோய்க்கும் அஞ்சுகின்றேன். இனி வரும் துயருக்கும் அஞ்சுகின்றேன். துயரமாகிய பெருங்கடலை நீந்துமாறு உயர்ந்த பதி நிட்டையில் என்னை நீ நிலைபெறச் செய்தால் உய்திபெறுவேன் (அவ்வாறு செய்வாயோ. கூறியருள்க) என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“போந்துயர் தனக்கும் அஞ்சுகின்றேன் இனிப்
புலால் உடல் நோய்க்கும் அஞ்சினேன் மேல்
ஆந்துயர் தனக்கும் அஞ்சுகின்றேன் இவ்
வருந்துயராம் பெருங்கடலை
நீந்து உயர் பதிநிட்டையில் நீதான்
நிறுத்தின் உய்வேன் சுடர் கிளர் வேல்
ஏந்துயர் பரம குருமணியே என்
இதய பங்கயம் வளர் ஒளியே” (செ.40)

**96. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு விளிக்கின்றார்? (செ.41இல்)**

ஒளியானவனே! ஒளிக்கு முதற்பொருளானவனே! உயர்ந்த பெரிய மாணிக்கமலை போன்றவனே! கோயில்களில்

வழிபாடு பெறும் எல்லாத் தெய்வங்களும் வந்து பணியும் திருவடியுடைய இளம் பரமனே! என்று சுவாமிகள் குமரவேளை விளிக்கின்றார்.

**97. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?**

இன்பத்தை ஊட்டும் குமரவேளின் திருவடியே எஞ்ஞான்றும் கதி என்று அவற்றைப் பற்றாமல் எளியேன் ஏனோ இவ்வாறு துயரில் உழல்கின்றேன்? அருளிச் செய்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“ஒளியே ஒளிக்கும் முதற்பொருளே
    உயர்மாணிக்கப் பெரு வரையே
தளியே இருக்கும் தெய்வம் ஏலாந்
    தாழும் சரணக் குமரேசா
களியே தரும் உன்திருவடி என்
    கதியாய் என்றும் இனிது எய்த
எளியேன் இயற்றும் செயல் பற்றாது
    ஏனோ இவ்வாறு உழல்கின்றேன்” (செ.41)

**98. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்? (செ.42இல்)**

ஆறெழுத்துக்கு உரியோனே! உலகச் சேற்றில் உழலும் மனம் நன்கு ஒடுங்குமாறு உனது திருவடியாகிய அருளை நினைந்து அழுதலும் எனக்கும் கூடுமோ? திருவடிப்பேறு அண்மையில் உள்ளதா சேய்மையில் உளதா என்று ஏங்கிப் புவியில் நினைவிழந்து விழுதலும் இனிக் கூடுமோ என்று விம்மி உளம் அழியும் என் அறிவில் கலந்த வெம்மையும் மடமையும் நீங்கும்படி நீ அருளைப் புரிவாயேல் நான் வாழ்வு பெற்றவன் ஆவேன். செய்வாயா? சொல்லியருள் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“உழலு மனம்(ம்) நன்கு ஓய்ந்திடுமாறு
உனது ஒண் பாத அருளை நினைந்து
அழலும் உறுமோ திருவடிப்பேறு
அணித்தோ சேய்த்தோ என ஏங்கி
விழலும் உறுமோ இனி என்றே
விம்மிச் சாம்பென் புந்தியுறு
தழலும் மடமும் ஒழிய அருள்
தந்தால் வாழ்வேன் **சடக்கரனே”** (செ.42)

சடக்கரனே – ஆறெழுத்துக்கு உரியோனே.

**99. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.43இல்)**

பரந்த உடம்பழகு வாய்ந்த மயில் மேல் எழுந்தருளும் ஒப்பற்ற தலைவனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**100. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

பிழைகள் பல செய்துள்ள யான் இவ்வுலகம் நிலையற்றது என்ற அறிவைப் பெற்றதுபோல வாலறிவனான உன்னைச் சார்ந்து நில்லேனோ. மெய்ந்நெறியாளர் வழியில் ஒழுகேனோ. தற்போதத்தின் முளையை மாய்க்கேனோ. மடமையைக் கூட்டும் யாவற்றையும் நீக்கேனோ. மாட்சிமையுடைய அமுதத்தைப் பருகேனோ. கூறியருள்க என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“**சட**(ம்) மெய்**யிலை** என்று**சடம் உணர்ந்தமை**
போல் அறிவைச் சாரேனோ
திட மெய்யுளர் சீர் நில்லேனோ
சீவமுளையைக் கொல்லேனோ
மட மெய் எவையுங் கடியேனோ
மாணார் அமுதம் குடியேனோ

தட மெய்யழகார் மயிலில் வரு
    தனி நாயகனே தவறுடையேன்" (செ.43)

"நில்லாதவற்றை நிலையன என்று உணரும்
புல்லறிவாண்மை கடை" (குறள், 331)

என்ற திருக்குறளின் கருத்து இங்கு நினைவுகூரத்தக்கது. உலகம் ஒரு சடப்பொருள்.

**101. அறிவு என்பதன் பொருள் யாது?**

சுவாமிகள் குமரவேளை அறிவு என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். வாலறிவன் (குறள்,2) என்று வள்ளுவர் கூறுவதும்,

"அறிவானும் தானே அறிவிப்பான தானே
அறிவாய் அறிகின்றான் தானே – அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே" (அற்புதத்திருவந்தாதி,செ.2)

என்று காரைக்காலம்மையார் கூறுவதும் இங்கு நினைவு கூரத்தக்கன.

**102. சுவாமிகள் குமரவேளை எப்படி அழைக்கின்றார்? (செ.44இல்)**

என்னை உடையவேன! கடப்பமாலை அணிந்தவனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**103. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

உற்றார்க்கும் பெற்றாருக்கும் உதவாத துறவியானேன். உன் அருளுக்கும் அயலான் ஆனேன். வேற்பரமனின் திருவடி ஒன்றையே பாடுவோம் என்னும் அன்புடையார் போன்று பலவற்றைக் குழறும் என்பால் நிறைந்த இனிய அன்பு செய்யும் இரக்கம் உள்ள குருவாவர் (நீயல்லாமல்) வேறு யார் உளர்? கூறியருள்க என்கின்றார்.

**“உடையாய் கதம்பத் தொடையாய்** நான்
உற்றார் பெற்றார்க்கும் உதவா
நடையான் என இங்கானேன் உன்
நட்புக்கு அயலுமானேன் வேற்
படையான் அடிய பாடுக மென்
பரிவே உளர்போல் பல குழறென்
கடையார் இனிதாம் அன்பு செயுங்
கருணைக்குரு ஆகுவர் அன்றே” (செ.44)

**104. “உடையாய்” விளக்கம் தருக.**

இவ்வுலகுயிர்களனைத்தையும் இறைவன் உடைமைப் பொருளாகக் கொண்டவன். ஆதலால் உடையாய் என்று சுவாமிகள் கூறினார்.

“உடையாய் என்னைக் கண்டு கொள்ளே” (திருச்சதகம்,செ.1)

என்று மாணிக்கவாசகர் கூறுவது இங்கு நினைவுகூரத் தக்கது.

**105. “கதம்பத் தொடையான்” – விளக்கம் தருக.**

தொடை என்பது மாலை எனப்பொருள் படும். கதம்பத் தொடையாய் – கடம்பமாலை அணிந்தவன் எனப் பொருள் படும். முருகனுக்கு உகந்த மாலை கடம்ப மாலை. “நன்கடம்பனைப் பெற்றவள்” என்ற அப்பர் வாக்கு இங்கு நினைவுகூரத்தக்கது.

**106. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ.45இல்)**

பிரப்பன் வலசையில் அன்று ‘‘நீ மயங்குதல் வேண்டா. நினக்கு அருள்புரிவோம் ‘அஞ்சற்க’ என்று நினது நறிய செவ்வாய் மலரின்று தோன்றிய அருளுரை பொய்படாது என்று அடியவன் இன்று வரை நம்பினேன். இனிமே என்

தீயூழ் எவ்வாறு நின்று கெடுதி செய்யுமோ? வேற்படை கொண்ட நிமலனே! நான் சிறிதும் அறியாதவனாய் உள்ளேன். என் செய்வேன்" என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"அன்று மயங்குனேற்கு அருள்வேம்
அஞ்சேல் எனு நற்பொருள் படுமாறு
உன்றன் நறுஞ் செவ்வாய் மலர் தான்
உரைத்த உரை பொய்யாது என நான்
இன்றுவரை நம்புற்றேன் மேல்
எளியேன் பொல்லா விதியாதாய்
நின்று கெடுதி செயுமோவேன்
விமலா சிறிதும் அறியேனே" (செ.45)

**107. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ.46இல்)**

வேற்பரமனே! பெருமையான வாய் ஞானம் பேசிப் பொருள் தருவார் பால் சென்று ஏற்க மட்டும் மிக நீண்ட கையுடையவனாயும், பிறருக்கு உதவுதற்கோ அந்நீண்ட கை மிகக் குறுகுங் கையாக மாறும் திறம் உள்ளவனாயும் மறுமை நலத்தை அழிக்கும் மூதேவி எனக்கும் அடியவர் செய்யும் குற்றங்களைப் பாராட்டாத பொறுமையுடைய அருளார் அமுதம் சிறிதேனும் பொழியுமோ? கூறியருள் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"சிறுமை தணந்த வாய்ஞானஞ:
செப்பி ஈவோரிடம் ஏற்கக்
குறுமை தணந்த கையுளனாய்க்
கொடுக்க அக்கையே இலனாய்
மறுமை நயங்கொள் மூதேவி
மல்க இருந்த எனக்கயிலோய்
பொறுமை அருளானா அமுதம்
பொழியுங் கொல்லோ சிறுவரையும்" (செ.46)

அடியார் செய்யும் பிழைகளைப் பொறுப்பவன் இறைவன் "பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை போற்றி" (திருச்சதகம், செ.66)

என்று மாணிக்கவாசகர் கூறுவது இங்கு நினைவுகூரத் தக்கது.

**108. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ.47இல்)**

ஞான வண்ணமான வேற்படையுடைய பரமனே! முலைகளோ மலைகள். இடையோ கொடி. முகமோதிங்கள். கண்களோ கடல்கள். மணங்கூட்டப்பட்ட கூந்தலோ கரிய மேகம். வாய் இதழோ கொவ்வைக் கனி என்று பழுதைக் கூட்டும் மடப்பம் பொருந்திய பெண்கள் பால் காமுற்றும் குற்றமுடைய எனக்கும் நினது திருவடித் தாமரையை நினைந்து அழவும் ஓர் அறிவு உண்டானதே. இது விந்தையல்லவா கூறியருள்க.

"வரையே முலைகள் இடை கொடியே
மதியே வதனம் கடல் விழியே
விரையே அளகம் கார்முகிலே
மிளிரும் கொவ்வை அதரம் எனப்
புரையேய் மடவார் மயனின்ற
புகரேற் கையார் வேலோய் கால்
மரையே நினைந்து இவ்வாறு அழவோர்
மனம் உண்டானது அதிசயமே" (செ.47)

**109. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.48இல்)**

வெற்றியே கொண்ட வேலிறைவனே! அருள் வண்ணனே! என் களை கண்ணே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**110. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?**

தமியேன் செய்த பிழையை எண்ணிப் பயம் கொண்ட என் சிந்தை உயிர்க்கு உறுதிதரும் நலமாகிய நின் திருவடியைப் பற்றி இன்புறுமேயானால் அஃது ஆண்சேர்க்கை பெறாத ஒரு மலடி மகப்பேறு அடைந்ததை ஒக்கும். ஏழையாகிய என் முகம் பார்த்து வந்தருளோயோ சொல் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"சயமே உள வேலிறையவனே
　　தமியேன் இழைத்த தவறெண்ணிப்
பயமே உள என் சிந்தை நலம்
　　பற்றா மகிழுமாயின் அது
வயமே அணையா ஒரு மலடி
　　மகப்பேறு உற்றது ஒக்கும் அருள்
மயமே எனது முகம் பார்த்து
　　வாராயோ என் **களைகண்ணே**" (செ.48)

**111. களைகண் என்ற சொல்லுக்குப் பொருள் யாது?**

ஆதரவு, இரட்சகன், உதவி, புகலிடம்

"போற்றியோ, நமச்சிவாய! புகலிடம் பிறிது ஒன்று இல்லை" (திருச்சதகம், செ.62)

என்று மாணிக்கவாசகர் கூறுவது இங்கு நினைவுகூரத் தக்கது.

**112. சுவாமிகள் குமரவேளை எப்படி அழைக்கின்றார்? (செ.49இல்)**

"என் கண்ணே! துறந்தோரின் இன்பமே! என் கவலையை அழிக்கும் அருமையான அமுதமே! சிதாகாசப் பொருளே! பெரிய பொன்மலை போல் விளங்குபவனே! வலிமையுடைய

கோழிக்கொடி கொண்ட வேந்தே'' என்று சுவாமிகள் குமரவேளை அழைக்கின்றார்.

**113. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

நின் தூய திருவடி மலரில் வழிபாட்டைச் செய்யாதவனாய் உள்ளேன். இனியும் இவ்வுலகில் பிறந்து உழலுதற்கோ எனக்கு மடைமையுடைய நெஞ்சு உளது கொல். சொல்லியருள் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"கண்ணே அறவர் களிப்பே என்
கவலை காதும் அருமருந்தே
விண்ணே கனகத் திருவரையே
விறல்சரல் கோழிக்கொடி அரசே
**பண்ணேன் நினது பரிசுத்த**
**பாதமலர்க்காம் பூசனை** இம்
மண்ணேயினும் வந்து உழலற்கே
மடநெஞ்சு உளதுகொல்லோ சொல்" (செ.49)

பண்ணேன் நினது பரிசுத்த பாதமலர்க்காம் பூசனை– "தவமே புரிந்திலேன் தண் மலர் இட்டு முட்டாது இறைஞ்சேன்" (திருச்சதகம், செ.5)

"பெய்கழல்கீழ் விரை ஆர்ந்த மலர் தூவேன்" (திருச்சதகம், செ.18)
என்ற திருவாசகத் தொடர்கள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.

**114. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.50இல்)**

நிறைமொழியான வேதம் கூறும் பிரணவப்பொருள் நீ! துயர்மிகுந்த உயிர்கட்கு அருள்புரியும் இறைவன் நீ! ஏழை மக்களின் குறை கண்டு வழங்கும் தலைவன் நீ! நற்கதி வழங்கும் குகதெய்வமே என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**115. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

எளியேன் உள்ளத் துன்பம் ஒழியுமாறு வளம் நிறைந்த நின் திருவருளை வழங்கமாட்டாயா? என்னைப் போன்றே கல்லாதவருக்கும் பொல்லாதவர்க்கும் நற்கதி வழங்கும் குகத் தெய்வமே கூறியருள் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"சொல்லார் **சுருதிப்** பிரணவ நீ
துயர்சால் உயிர்கட்கு அருளிறை நீ
இல்லார் குறை கண்டு ஈ இறை நீ
எளியேன் உண்ணோயிறுமாறு
வல்லார் அருளைத் தாராயோ
வையம் அதனில் என்போன்ற
கல்லார் பொல்லார் எல்லார்க்கும்
**கதி தந்தருள் குகதேவே"** (செ.50)

**116. சுருதி என்பதன் பொருள் யாது?**

வேதம் என்று பொருள். வேதம் காகிதத்திலோ வேறெதிலோ எழுதி வைத்துப் படித்து மனனம் செய்து கூறப்பட்டு வந்ததன்று. செவியால் கேட்டே பயின்ற கல்வி ஆதலால் சுருதி எனப்பட்டது.

கதி தந்தருள் குகதேவே – கதி வழங்கும் கந்தன்
கழலிணைகள் எஞ்சிரத்தில் கருத்தில் வைப்பாம்"
(சிவஞானசித்தியார் பரபக்கம், செ.5) என்பது முற்கூறிய
தொடருடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

**117. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.51இல்)**

குகனே! சிவகுருவே! என்று அழைக்கின்றார்.

**118. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

என் உள்ளத்து மகிழும் செயல் யாவும் அன்பு செய்யும் திருவருட் செயலே என்று ஒருகாலும் அடியவன் மனம் என்னும் பகை எதிர்தலும், அஞ்ஞான்று அதை எதிர்த்து ஏதும் செய்ய மாட்டாது அறிவு சும்மா இருத்தல் கண்டு இவை யாவும் என் தீவினைப் பயனே என்று உள்வருந்தி அழுமாறு செய்பவர் யார்? கூறுக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"குகனே சிவனார் குருவே என்னுள்
குதிகொள் செயல் எல்லாம்
அகனேச அருட்செயல் என்று ஒரு கால்
அடியேன் மனமான
இகனே ருறவே சும்மா இருப்ப
இவை என் வினை என்று என்
அகனே வருந்தி அழுமாறு ஒருகால்
அயர்கின்றவர் யாரோ" (செ.51)

**119. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.52இல்)**

ஆரா அமுதே! கூரிய வேல் கொண்ட கொற்றவனே! அடியார்கட்கு இனியவனே! பெரியோனே என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**120. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

வேறு யாரால் எனக்கு நலம் உண்டாகும் என்று எண்ணி வேறு யாரைத் தொழுகின்றேன். நீ இதைச் சிறிதும் அறியாயா? என்பால் வந்தருள். என் கதி யாதாமோ என்று மருளும் என் முகவாட்டத்தை நீக்கி அருள். உனது இனிய செம்மாப்பை வழங்கியருள். உன் திருவடியில் அடியேனைச் சேர்த்தருள் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"யாரான் நலம் உண்டாம் என்று எண்ணி

யாரைச் சூழ்கின்றேன்
ஆராவமுதே அயில் வேலரசே
அறியாயோ சிறிதும்
வாரா அடியார்க்கு இனியோய் பெரியோய்
மருள் என் முகவாட்டந்
தீராய் உனது இன் செம்மாப்பு அளியாய்
சேராய் சேவடியே” (செ.52)

**121. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.53இல்)**

மணம் பொருந்திய அருள் நிறைந்த கழலடி உடையவனே! முக்கட் பரமனின் திருமகனே என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**122. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

காசி யாத்திரையின்போது அடியேன் பல புண்ணிய நதிகளில் நீராடி அங்கங்கு எழுந்தருளிய தெய்வத் திருவுருவங்களை முருகனே என்று பாவித்துத் தொழுதேன். ஊரின்கண் வாழ்பவனும் ஆனேன். எனது உள்ளக் கருத்து நிறைவேறாமல் வருந்தும் என் முகவாட்டத்தை நீக்கியருள் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“அடியேன் பல புண்ணிய நீர் மூழ்கி
யானா மூர்த்திகளாம்
வடிவே நீ என்றே தாழ்ந்தேன் தேனூர்
வசித்தேன் எனது எண்ணம்
முடிவே யுறலில்லாமே வருந்து என்
முகவாட்டம் தவிராய்
கடியேற அமுதக் கழலாய் முக்கட்
**கத்தன் திருமதலாய்”** (செ.53)

**123. கத்தன் என்ற சொல்லின் பொருள் யாது?**

கடவுள், சிவன், விட்டுணு எனப் பொருள்படும். இங்குச் சிவனைக் குறிக்கும்.

**124. மதலாய் என்றதன் பொருள் யாது?**

மகன் எனப் பொருள்படும்.

**125. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.54இல்)**

மணம் நிறைந்த தேன் செறிந்த கடம்பமாலை அணி செய்யும் திருமார்பு உடைய பெருமானே என்று அழைக்கின்றார்.

**126. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

கண்டாரால் விரும்பப்படும் தன்மையுடைய எந்த ஊரை அடைந்தாலும், தெய்வ வழிபாடு செய்தாலும் பெருமையுடைய ஆறுகளில் நீராடினாலும், தெய்வங்களின் பெயர்களைச் சொன்னாலும், அழியாத ஒளிப்பிழம்பான உன் திருவுருவத்திலே என் கண்கள் படியவில்லை என்றால் என்னுள்ளமும் படியாது அலைந்து கொண்டிருக்கும் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"திருவார் எந்தத் தலம் உற்றாலும்
 தெய்வந் தொழுதாலும்
பெரு **வாரி** படிந்தாலும் தெய்வப்
 பெயர்கள் சொற்றாலும்
மருவார் அளி நக் கடம்பார் மார்பா
 மங்கா ஒளியா முன்
உருவான அதிலே படியாவிடின் என்
 உள்ளம் படியாதே" (செ.54)

**127. வாரி என்ற சொல்லின் பொருள் யாது?**

வாரி – கடல்

**128. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ.55இல்)**

என் உள்ளத்துள்ளும் புறத்தும் முழுநிறைவாய் ஒளிப் பிழம்பாய் விளங்கும் உன்னை பல இடங்களிலும் துள்ளித் திரியும் அழுக்குடைய நெஞ்சுடைய அடியவன் என் உள்ளத்துக் காணும் அறிவு பெறாது மற்ற எல்லா இடங்களிலும் உன்னைத் தேடும் செயலானது ஒரு பெரிய மலைமேல் நிற்கும் ஒரு குருடன் பெருங்காற்றால் அலைப்புண்டு கீழே தள்ளப்பட்டுத் துன்புறும்போது மலை என்னைக் கீழே தள்ளிப் போய் விட்டது என்று சொல்லுதலையே ஒக்கும் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“உள்ளும் புறமும் பரிபூரணமாய்
 ஒளியாய் உள உன்னைத்
துள்ளும் கறை நெஞ்சுடையேன் தேடும்
 தொழில் மாமலை நின்று
தள்ளும் **பவனத்து** அலைப்புண்டு ஒல்கிச்
 **சயிலம்** போயிற்று என்று
உள்ளுஞ் **சிதடன்** செயல் ஒக்கும் அரோ
 ஒளிவேற் படையானே” (செ. 55)

**129. பவனம் என்ற சொல்லின் பொருள் யாது?**

காற்று எனப் பொருள் படும்.

**130. சயிலம் என்ற சொல்லின் பொருள் யாது?**

சயிலம் என்பது மலை எனப்பொருள் படும்.

**131. சிதன் என்ற சொல்லின் பொருள் யாது?**

சிதடன் – குருடன்.

**132. இறைவனைப் புறத்தே தேடுவதை விட்டு உள்ளத்தில் தேடுவது பற்றி எடுத்துக் காட்டுகள் தருக.**

“தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனே என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்” (4:9:12)

என்று திருநாவுக்கரசரும்,
“முகத்தில் கண் கொண்டு காணும் மூடர்காள்
அகத்தில் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்”
(திருமந்திரம், 2944)
என்று திருமூலரும் கூறுகின்றார்.

**133. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு விளிக்கின்றார்? (செ.56இல்)**

ஐந்தொழில் புரிவோனே! அறிஞரை அடையும் இனிய அமுதே! சர்க்கரையே! அருமையான தேன்பாகிலே பாயும் இனிய சாறே! பலாச்சுளையே! மாங்கனியே! வாழைப்பழமே! நல்ல மயிலை ஊர்தியாக உடைய பெருமானே என்றெல்லாம் சுவாமிகள் அழைக்கின்றார்.

**134. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்?**

தன் உள்ளத் துயர் முழுவதையும் காத்தருள சுவாமிகள் வேண்டுகின்றார்.

“இடரைக் களையும் எந்தாய் போற்றி” (போற்றித்திருஅகவல், வரி, 101)

“தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி” (மேலது, வரி, 131)

என்று மாணிக்கவாசகர் கூறுவது இங்கு நினைவுகூரத் தக்கன.

**135. இறைவன் புரியும் ஐந்தொழில்கள் எவை?**

படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல்.

“படைப்பாய் காப்பாய் அழிப்பாய் மறைப்பாய்
பந்தந் துணித்து ஆள்வாய்
அடைப்பாய் அறிஞர்க்கு இனிப்பா மருந்தே
அயிரே அருந் தேம்பாகு
இடைப்பாய் இழுதே பலவின் சுளையே
ஏனைத் தீங்கனியே
துடைப்பாய் எனது உள்துயரெல்லா நற்
றோகைப் பரியானே” (செ.56)

**136. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ. 57இல்)**

எங்கும் நிறைந்த வேலிறைவனே! எளியேன் பலவகைப்பட்ட மந்திரங்களை எண்ணேன். மலர்ந்த பூ, இலை இவைகளை நோய் போக்க மக்கட்கு வழங்கி வாழும் தொழிலும் அறியேன். நரசிங்கம், அனுமார் முதலிய தேவதைகளைப் பூசித்து மாயசித்திகளையும் பெற அறியேன். குறி சொல்லி (இக்காலத்தில் அருள்வாக்கு என சொல்லும்) உழல்கின்ற உலகர் தொழிலும் அறியேன். இவ்வுலகத்தில் நான் பிழைக்கும் வழி யாதோ? சொல்லியருள்க என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“பரிபூரண வேலிறையே எளியேன்
பன் மந்திரம் எண்ணேன்
விரி பூ இலை ஆதிகளான் நோய்வெல்
வினையும் பிடியேன் மால்
அரி பூசனையின் மாயச் சித்தி
அறியேன் குறிசொல்லித்

திரி பூ வினையும் தெரியேன் இவன்உய்
திறம் ஏதோ சொல்லாய்" (செ.57)

**137. சுவாமிகள் குமரவேளிடம் என்ன சொல்கின்றார்? (செ. 58)**

புகழ் நிரம்பிய வேதம் கூறும் முதற்பொருளே! கையில் வேலேந்திய துரையே செம்பு முதலியவற்றைப் பொன்னாக மாற்றும் இரசவாதத் தொழிலில் வல்லவன் என்றும், செத்தாரை எழுப்பித் தருவேன் என்றும், கல்லாகியிருக்கும் மனத்தை வெண்ணெய் போலக் கரையுமாறு செய்வேன் என்றும், கடவுளைக் காட்டுவேன் என்றும் மக்களை ஏய்ப்பார்தம் தொழிலும் அறியேன். நான் உணவுக்கு என் செய்வேன்? (அந்தோ! கூறியருள்க) என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"சொல்லார் சுருதிப் பொருளே வேற்கைத்
துரையே செம்பெல்லாம்
வில்லார் பொன்னாக்கிடுவேன் காயம்
வீழ்த்தாரைத் தருவேன்
கல்லார் மனமும் கரையச் செய்வேன்
கடவுள் காட்டுவல் என்று
அல்லார் வினை செய்திடவும் பொருந்தேன்
**அடிசிற்கு** என் செய்வேன்" (செ.58)

**138. அடிசில் என்பதன் பொருள் யாது?**

அடிசில் – உணவு. "போதையார் பொற்கிண்ணத்து **அடிசில்** பொல்லாதன" (3:24-2) என்று சம்பந்தர் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

**139. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ. 59)**

என் தலைவனாகிய வேல் இறைவனே! இந்த உலகத்துக்குப் பயன்படுமாறு எந்தவிதச் சித்தியும் இல்லாதவன் நான்.

என்னால் பெறலாகும் நலம் யாதொன்றும் இல்லை என்று என்னைத் தெரிந்தவர்களும் விலகிப் போய் விட்டனர். பகைவரை ஒத்து நான் உண்ணும் உப்பில்லாத சோற்றை அளிப்பவர்களும் இப்போது குறைந்து விட்டார்கள். யாரேனும் பணத்தை என் கையில் தரவரினும் அதைத் தீண்டுவேனோ? தீண்டமாட்டேன் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"என் நாயக வேல்இறையே உலகத்து
எச்சித்தியும் இல்லா
என்னால் நயம் இன்று என்றே அகன்றார்
என்னைத் தெரிந்தாரும்
ஒன்னார் புரை நான் உண்ணு உப்பில்லா
உணவே அளிப்பாரும்
இந்நாள் அணுகுற்றனர் காசு என் கை
இடினும் கொள்வேனோ" (செ.59)

ஒன்னார் – பகைவர்.

**140. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ.60இல்)**

அழகிய வேலேந்திய இறைவனே! பசித் துன்பத்தால் ஒருநாள் கள்ளிப்பழத்தையும் உண்டேன். குறையாத அன்பும் பக்தியும் ஓங்கும் உள்ளம் உடைய குமரானந்தம் (பங்காரு அம்மாள்) என்னும் பெயருடைய மூதாட்டி எனக்கு உணவு அளிக்காவிடில் உயிர் தங்கும் இவ்வுடம்பு இத்தனை நாள் தங்கியிராது. சென்னை வாழ் அறிஞர்கள் புகழும் அம்மாதைக் காத்தருள்வாய் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

சுவாமிகள் பழவேற்காட்டின் அருகிலிருக்கும் காட்டில் கந்தக் கடவுளைத் தியானித்திருந்தார். அப்போது பசித்துன்பத்தால்

அங்குள்ள செந்நிறக் கள்ளிப் பழங்களைப் பறித்துத் தின்றார். பசி வந்தால் பத்தும் பறந்துபோம் என்பர்.

"கொள்ளச் சயிலா கள்ளிப் பழமும்
 கொண்டேன் பசித்து ஓர்நாள்
எள்ளத் தனையும் அன்பிற் பிரியா
 இயல்பும் பக்தியும் ஓங்கு
உள்ளக் குமரானந்தப் பெயர் மாது
 உணவு ஈயாவிடின் என்
பொள்ளற் சட நில்லாதே சென்னைப்
 புகழும் மாதைக் கா" (செ.60)

பொள்ளற் சடம் - உடம்பினைக் குறித்தது.

"பொத்தை ஊன் சுவர்" (அதிசயப் பத்து, செ.7) என்று மாணிக்கவாசகர் கூறுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. பொத்தை-பொள்ளல். பொறிகளும் மயிர்த் துவாரங்களும் ஆகிய பொள்ளல்கள் பல உடைமையால் பொத்தை என்றார். இப்பாடல் சுவாமிகளின் நன்றி உணர்வைக் காட்டுகின்றது.

**141. சுவாமிகள் குமாரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.61இல்)**

என்னைக் காத்தருள வேண்டும் என்று நின் திருவடியைப் போற்றும் அடியவனை ஆட்கொண்டருளும் சிவனே! கந்தனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**142. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

உன்னையே தேவதேவனாகக் கருதும் உள்ளமும், அன்பு சிறந்த ஒழுக்கமும் ஓங்குமாறு உலகத் தொடர்பினின்றும் நீங்கும் என்னை நம்பும் பிரப்பன்வலசையில் வாழும் உடைய நாயகம் பிள்ளை என்பார் இப்போது அடையும்

துயரத்தைக் களைந்தருள். அவரை நின் அருளில் வைத்து இனிது ஆட்கொண்டருள்க என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“கா எனக் கருது என்னை ஆள் சிவ
கந்தனே உனையே பெருந்
தேவெனக் கருது உள்ளொடு அன்பு
சிறந்த சீலமும் ஓங்கவே
ஓவெனைக் கருதோர் பிரைப்பையில்
உடைய நாயக மீண்டுறு
தாவினைக் களை அருள் புரிந்து உயர்
தயவில் வைத்து இனிது ஆள்வையே” (செ.61)

இப்பாடல் சுவாமிகள் பிறர் துயர் களைய குமரவேளைப் பிரார்த்திக்கும் பண்பை உணர்த்துகின்றது.

“மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு” (குறள், 106)
என்கின்றார் வள்ளுவர்.

**143. சுவாமிகள் குமரவேளிடம் என்ன வேண்டுகின்றார்? (செ.62இல்)**

எல்லோரையும் ஆட்கொண்டு அருளும் தன்மையுடைய நினது திருவடியைப் பணிபவர்க்கு அருள் பொழியும் வேலுடையானே! என்பால் கேண்மை மிக்கு வேண்டுவன வற்றை அளித்து என்னை நம்புகின்ற அன்பர்கட்கும் உரிய செல்வத்தை எப்போதும் வழங்கியருள் பராபரனே! **நாயேனை அருளாது தள்ளிவிட்டாலும் எளியேனை நம்பி உன் திருவடி நாடும் அன்பரைத் தள்ளிவிடாது உன் திருவடி தந்து ஆண்டருள்க என்று சுவாமிகள் வேண்டுகின்றார்.**

இது சுவாமிகள் தன்னலம் கருதாது பிறர் நலம் பேணும் பெற்றியை உணர்த்துகின்றது.

"ஆளுநின் அடிசூழநர்க் அரு
ளயில மற்றும் எனக்கிடு
கேள் உயர்ந்து எனை நம்பும் அன்பு
கிளர்ந்தவருக்கும் இயைந்த சீர்
நாளு நல்குதி நாயெனைத் த(ள்)ளி
னாலும் என்றனை நம்பி உன்
தாள் உகந்தவரைப் பராபர
தள்ளிடாது அடி நல்கி ஆள்" (செ.62)

**144. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.63இல்)**

நல்ல பொன்போல் அழகான மயிலில் வரும் ஒப்பற்ற என் இறைவனே! என சுவாமிகள் அழைக்கின்றார்.

**145. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

அளவை நூலில் நான் வல்லவன் என்று யாவரும் புகழ வேண்டும் என்று எண்ணிப் பட்டிமண்டபங்களை அணுகு விரும்பினேன் அல்லேன். இல்லறத்து ஒழுகும் சிறந்த மனிதர் என்று புகழ் பெற்றார் அன்பினையும் நம்பிலேன். ஊண், உடை, இருக்கை, பணியாள் முதலியவை இல்லாத துன்பத்தைத் தீர்க்கும் மடம், கோயில் ஆகியவை அமைத்து வாழவும் எண்ணிலேன் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"நல்ல பொன்மயில் ஊரும் என் **ஒரு**
நாதனே இனி வாதநூல்
வல்லன் என்று மதிக்குமாறு உரை
மல்கு சங்கம் விரும்பிலேன்
இல்ல மேய சிறந்த மானவர்
என்பர் நேயமும் நம்பிலேன்
அல்லல் தீர் மடம் ஆலயங்கள்
அமைத்து வாழவும் எண்ணிலேன்" (செ.63)

ஒரு–ஒப்பற்ற

**146. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.64இல்)**

வேற்பரனே! நினைப்பவர் உள்ளத்து விரைந்து சேர்ந்து அருள்புரியும் எம்பிரானே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

“எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும் அக்கோலத்து அவ்வுருவே ஆம்” (அற்புதத் திருவந்தாதி, செ.33) என்று காரைக்காலம்மையார் கூறுகின்றார்.

**147. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

அடியவன் இன்ப வண்ணமாய் நினது ஞானவெளி வாழ்வின் நினைவாகவே இருந்து, விரைவாகச் சுழலும் பம்பரமானது மண்ணில் வீழ்ந்து அசைவற்றுக் கிடப்பது போல, நினது குளிர்ச்சியான திருவடியில் வீழும்படி எண்ணும் உண்மையை நினது திருவுளமும் நன்கு அறியுமே என்று சுவாமிகள் கூறுகின்றார்,

“எண்ணுவார் அகம் நண்ணியே வரும்
எம்பிரான் நினது இன்பமாம்
விண்ணுலா நினைவாய் இருந்து
விரைந்து சுற்றொரு பம்பரம்
மண்ணுளே அசைவற்று வீழ்வது
**மான** நான் அயிலீச நின்
நண்ணுலாம் அடி வீழ எண்ணிய
**சரதம்** உன் உள்ளம் அறியுமே” (செ.64)

மான–போல.

**148. சரதம் என்ற சொல்லின் பொருள் யாது?**

சரதம் – சத்தியம், உண்மை.

**149. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.65இல்)**

நறிய பெரிய வேதங்களின் முதல்வனே! அருள் தலைமை உடையவனே! வேலிறைவனே! யாவும் அறியும் அனாதிப் பரம்பொருளே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**150. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

என் மனம் இறந்ததும் ஐம்பொறிகளும் அநேக விகாரங்களையுடைய உலகம் யாவும் என்னுள்ளத்தில் கானல் நீர் எனத் தெரியும் ஞானம் விளங்க அருள் புரிவாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“அறியன் அனாதி என் நெஞ்சு இறந்திடும்
அவத ரஞ்சக மயம் எனும்
பொறி அனேக விகாரமாகிய
புவனம் யாவும் எனக்குளே
சிறிய கானல் நீரெனத் தெரி
தெளிவில் அங்கிட வருடியால்
நறிய மாமறை நாயகா அருள்
நாயகா வயினாயகா” (செ.65)

வயின்–வீடு. வயின் நாயக – வீடுபேற்றைத் தரும் தலைவ.

**151. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.66இல்)**

எல்லா உயிர்களிடத்தும் அன்புடைய பெருமானே! சேய்ப் பரமனே! **தூயவனே!** பரமாச்சாரியனே என்று சுவாமிகள்

அழைக்கின்றார். (இறைவனுக்கு உரிய எண்குணங்களுள் ஒன்று தூய உடம்பினனாதல்)

**152. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

நாய் ஒத்த இந்த அடியவன் உன்னையே நினைந்து நினைந்து என் நாக்கு வரளுமாறு அலறிலேன். எனக்கு அருள்புரி என்று தெருக்களில் நின்று ஓலமிட்டு வருந்திலேன். அருள்புரி என்று வீதிகள் தோறும் தரையில் கிடந்து புரண்டிலேன். நான் நன்கு உய்யுமாறு அருள் செய்வாயோ கூறுக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“நாயனேன் உனை எண்ணி எண்ணி என்
நா வரண்டிட அலறிலேன்
நேயனே அருள் என்று வீதிகண்
நின்று கத்தி வருந்திலேன்
தூயனே அருள் என்று வீதி
தொறுங் கிடந்து புரண்டிலேன்
சேயனே குருராயனே அருள்
செய்வையோ நனி உய்யவே” (செ.66)

நா வரண்டிட அலறிலேன்–‘‘ஏத்தேன் நாத் தழும்பேற’’ (திருச்சதகம், செ.13) என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

**153. சுவாமிகள் குமரவேளை எப்படி அழைக்கின்றார்? (செ.67இல்)**

வேதம் கூறும் ஞானமாகிய சிறப்பை உடைய வேற்பரனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**154. சுவாமிகள் வேற்பரமனிடம் என்ன கூறுகின்றார்?**

உன் அழிவற்ற திருவடியைப் போற்றாத என் நாவை அறுத்திலேன். உன்னை உள்ளிடத்து நன்கு இருத்தி

நினைந்துருகாத பெருந்தீவினை கெடுமாறு என் நெஞ்சை ஆணியடுத்துப் பிளந்திலேன். விருப்பத்தோடு உன்னைப் பணியாத குற்றமுடைய என் அங்கங்களை வெட்டி எறிந்திலேன். இப்படிப்பட்ட எனக்கும் அருள் புரிவாயோ. சொல் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“வேத ஞான விழுப்ப வேல உன்
மெய்ப்பதம் துதியாத என்
ஏத நாவை நறுக்கிலேன் உள்
இருத்தியே கருதாத மா
பாதகம் கெட நெஞ்சில் ஆணி
பதித்து நன்கு பிளந்திலேன்
**ஆதரத்துடனே** தொழா வடு
அங்கம் வெட்டி எறிந்திலேன்” (செ.67)

“முனைவன் பாத நன் மலர்ப் பிரிந்திருந்து நான் முட்டிலேன் தலைகீறேன்” (திருச்சதகம், செ.37) என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

**155. ஆதரம் என்ற சொல்லின் பொருள் யாது?**

ஆதரம் என்பது அன்பு, ஆசை என்று பொருள்படும்.

**156. சுவாமிகள் குமரவேளை எப்படி அழைக்கின்றார்? (செ.68இல்)**

பகைவரை அழிக்கும் வேல் கொண்ட குகப்பரமனே என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**157. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

உன் புகழ் என்னும் இனிமை புகாத என் இரு காதுகளையும் நீண்ட குந்தம் கொண்டு குடைந்து குத்தி அறுத்திலேன். கலக்கம் போக்கும் உன் அழகைக் காணாத என் கண்களை

அலகு கொண்டு சிறகு செறிந்த புறாக்களின் முட்டை எனும்படி எடுத்துச் சிதைத்திலேன் எனக்கும் நீ அருள் புரிவாயா? கூறியருள் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“எறிபடைக் குக உன் புகழ்ச் சுவை
    ஏறிடா இரு காதிலும்
குறிலெனா தச லாகை கொண்டு
    குடைந்து குத்தி அறுத்திலேன்
வெறியில் உன் எழில் கண்டிடாத என்
    **விழிகளைக் கதிர் கொண்டு** இறை
செறி **புறாவின் முட்டை என்ன**
    எடுத்து நன்கு சிதைத்திலேன்” (செ.68)

**158. விழிகளை எதற்கு உவமையாகச் சுவாமிகள் கூறுகின்றார்?**

புறாவின் முட்டைக்கு உவமையாகக் கூறுகின்றார்.

**159. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.69)**

தண்டப்போரில் வல்ல சூரபதுமன் முதலிய அசுரரை அழித்த பெருமையுடைய வேல் கொண்டு விளங்கும் அத்தனே என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**160. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

கல்லைக் கடித்தாலும் முறிவுறாத வலிமையான என் வெண்ணிறப் பற்கள் நிலத்தில் விழும் விதைகள் எனும்படி விழுந்தொழிந்தன. அதுபோல என்னைப் பிடித்துள்ள மும்மலங்களும் அழியும்படி நீ விரைந்து வந்து அருளும் நாள் எதுவோ? பேரறிவு இல்லாத அடியேன் அறியேனே என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“சிதைவுறா வலியுற்று வெண்மை

திகழ்ந்த என்னது பற்கள் வீழ்:
விதைகள் என்ன விழுந்து ஒழிந்தமை
போல என் மலம் யாவுமே
சிதைய நீ விரை அருளுநாள் எது
தெரிகிலேன் உயர் அறிவிலேன்
கதை கடா அசுரர்க் களைந்த
கனத்த வெஃகவிர் அத்தனே" (செ.69)

**161. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.70இல்)**

அத்தனே! அருள்நிதியாகிய அப்பனே! என் முதல்வனே! உயர்ந்த நீதியாய் உள்ளவனே! அழிவற்றவனே! கலை பற்றாதவனே! உயர்ந்தோர் கருதும் அன்பனே! வேதம் அருளிய திருவாயுடையவனே! சேய்ப்பரமனே என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**162. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

பித்தனாகிய நான் அறியாது செய்த பிழைகளை மன்னித்தருள்க. பேரின்பத் தேன் கொண்டு என் சித்தம் குளிரும்படி அருள்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"அத்தனே அருளப்பனே எனது
**ஆதியே** பெரு **நீதியே**
**நித்தனே** நிருவாணனே நினை
நேயனே மறைவாயனே
பித்தனேன் **அறியாது செய்த**
**பெரும் பிழைத்தொகைமன்னி** என்
சித்தமானது தண்ணெனப் புரி
தேறலுங் கொடு சேயனே" (செ.70)

''அருள்நிதி தருவரும் ஆனந்த மலையே'' (திருப்பள்ளி எழுச்சி, செ.2)

“ஆதிபோற்றி” (போற்றித்திருஅகவல், வரி, 107)

“அத்தா போற்றி” (மேலது, வரி, 123, வரி, 174)

“நித்தா போற்றி” (மேலது, வரி, 175)

“சிறியேன் பிழை பொறுக்கும் கோனே” (திருச்சதகம், செ.85)

என்று மாணிக்கவாசகர் கூறுவன இங்கு நினைவுகூரத் தக்கன.

**“நீதியே”** (அருட்பத்து, செ.1) என்று மாணிக்கவாசகரும், “வையம் ஏழுக்கும் நிலை செய்யும் **நீதி”** (உய்யஞானத்து என்று தொடங்கும் திருப்புகழ்) என்று அருணகிரிநாதரும் கூறுவதும் இங்கு நினைவுகூரத்தக்கன.

**163. சுவாமிகள் குமரவேளை எப்படி அழைக்கின்றிார்? (செ.71)**

நீண்ட வேலைத் தாங்கிய அழிவற்ற ஒருவனே எங்கள் இறைவனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**164. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

கொடியன புரிதல் இல்லாத நல்ல கொள்கையுடைய பெரியோர் முன்னாளில் தங்கள் உள்ளத்திலுள்ள இருளாகிய ஆணவமலத்தை நெடுநாள் தவமிருந்து வென்று பேரின்பப் பேறு பெற்றனர். கல்லொத்த மனமுடைய எனக்கு மட்டும் குறுகிய காலத்தில் கூடுமோ? கூடாதே. என் செய்வேன் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“கொடுமையே இல்லாத நல்ல கொள்கையார் முன்னாளுளே
படுமை தன்னை நீண்ட நாளில் வென்றடைந்த பாக்கியம்
கடுமை நெஞ்சு எனக்கும் எய்து காலம் அற்பமாகுமோ
நெடுமை வேல் பரித்த ஏக நித்த எங்கள் கத்தனே” (செ.71)

**165. சுவாமிகள் குமரவேளை எப்படி அழைக்கின்றார்? (செ.72இல்)**

இறைவனே! அன்பர் உள்ளத்து நடனம் செய்பவனே! அருள் உள்ளத்தினர் காணும் பெரும் முத்தனே! கடம்ப மலர் அணிந்த திருத்தோள்கள் உடையவனே! என்று சுவாமிகள் அழைக்கின்றனர்.

**166. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

இரும்பையும் கல்லையும் ஒத்த நெஞ்சுடைய நான் அளவற்ற தொழில்களை விரும்புதல் பித்தரின் செயலே ஆகும். எனக்கு முன்பிருந்த சான்றோர்களும் இதைக் கேட்டார் சிரிப்பர்.

**167. அளவற்ற தொழில்கள் என்று சுவாமிகள் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?**

உபதேசம் செய்தல், சீடர் கூட்டத்தைச் சேர்த்தல், பலருடைய புகழ்ச்சியையும் விரும்பல், நோய் நீக்கல், குறி சொல்லல், சித்துக்கள் செய்தல், இசையில் விருப்பம் கொள்ளல், நகைச்சுவை நாடல் முதலியன. (உரையாசிரியர், செ.72இன் உரை)

“கத்தனே நிருத்தனே கனிந்த நெஞ்சர் காணுமா
முத்தனே கடம்பம் அணிந்த மொய்ம்பனே **இரும்பு கல்**
**ஒத்த நெஞ்சினேன்** அளப்பில் உத்தியோகம் வேண்டல் உன்
மத்தர் கொள்கையாகும் நன் மக்களும் சிரிப்பரே” (செ.72)

“இரும்பு நெஞ்சம்” (இருப்பு–இரும்பு) (திருச்சதகம், செ.80)
“நெஞ்சம் கல்லாம்” (திருச்சதகம், செ.21)
என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

**168. சுவாமிகள் குமரவேளை எப்படி அழைக்கின்றார்? (செ.73இல்)**

ஆறெழுத்தாகிய சரவணபவ என்னும் மந்திரத்திற்கு உரிய ஈசனே என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**169. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

மக்களில் சிறந்துள்ளோர் (அடியார்கள்) தங்கள் நூல்களில் வழங்கியுள்ள சொற்களானவை நான் பாடிய நூல்களிலும் (முன்னோர் மொழியைப் பொன்போல் போற்றுதல் என்பதற்கு ஏற்ப) என்னை அறியாமலே என் மொழியில் தொடர்ந்து புகுந்துள்ள தன்மை போல, தீங்கு செறிந்த என் உள்ளத்திலும் உனது இனிய அருளானது தக்கபடி புகாதோ? சொல்லியருள் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"மக்களில் சிறந்துள்ளோர் வழங்கியுள்ள சொற்கள் என்
தொக்க நூலுண் நான் அறிந்திடா வணம் தொடர்ந்தரோ
புக்கவாறு தீய என்புலத்தில் உன்றன் இன்னருள்
தக்கவாறு புக்குறாது கொல் சடக்க ரேசனே" (செ.73)

**170. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.74இல்)**

வினோத சிவயோக வேற்கடவுளே என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**171. சுவாமிகள் குமரவேளிடம் என்ன சொல்கின்றார்?**

அறிவற்றது என்று சொல்லப்படும் இந்த பொய்யான உடம்பை மெய் என்று பூரித்து நானும் உனது அடியவர்கள் அருளியுள்ள சாத்திர நூல்களை விரிவுரை செய்வதும், அச்சாத்திர மொழிகள் கூடிய பாடல்கள் பலவற்றைப் பாடி வைப்பதும் ஆராயின் அழகிய உடலைக் கொண்ட விலைமகள் தன் உடம்பைப் (பிறருக்கு இன்பமூட்டுவதற்காக) அலங்காரம் செய்தலைவிட உயர்ந்த செயல்கள் ஆகுமோ? கூறியருள் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"சடம் எனச் சொல் பொய்யிருக்கு நான் உன் அன்பர் சாத்திர
படம் விரிப்பதும் பல் பாடல் பாடி வைப்பதும் பொலா

உடலிருக்கும் வேசி தன் உடம்பை அலங்கரித்தலை
விட உயர்ச்சி ஆகுமோ வினோத யோக வேலனே” (செ.74)

சடம் – அறிவற்றது.

**172. சுவமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.75இல்)**

வேலைப் பிடித்த திருக்கை உடைய முதல்வனே! எம்பெருமானே என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**173. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

மயக்கம் பற்றிய என் உள்ளத்தில் ஞானநிட்டையும் தங்குமா? ஆங்கு சிதாகாசம் விளங்குமா? நின் திருவடியைப் பற்றினவர்க்கு அஃது ஒரு நொடியில் கைகூடும். எண்ணற்ற நூல்களையே பற்றிக் கொண்டு முடிவான உண்மை அறியாதோரும் அந்நூல்களைத் துருவித் துருவி ஆராயினும் நின்னைக் காணும் வல்லரோ? ஆகார்.

“நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக” (அற்புதத் திருவந்தாதி, செ.33) என்று காரைக்காலம்மையார் கூறுகின்றார்.

“வேல்பிடித்த கைம்முதால் விவேக நிட்டை எம்பிரான்
மால் பிடித்த என் மனத்தின் மன்னுமோ விண் மின்னுமோ
கால் பிடித்தவர்க்கு அதுஓர் கணத்தில் எய்தும் எண்ணிலா
நூல் பிடித்துளாருமே நுழைந்து காண வல்லரோ” (செ.75)

**174. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்? (செ. 76இல்)**

வலிய துன்பத்தைத் தந்து காமமாகிய பெருங்காட்டினுள் எப்போதும் புகும் மனமாகிய குரங்கு அடங்கி ஒடுங்குமாறு செய்யும் பயிற்சி எவ்வளவினதோ அவ்வளவுக்கு மட்டுமே

அது இன்பமாகும் எனக் கல் ஒத்த நெஞ்சுடைய நானும் நன்கு தெரிந்து கொண்டேன் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"வல் இடும்பை தந்து மோகமா வனத்திலே சதாச்
செல்லு நெஞ்சு எனுங் குரங்கு தேயுமாறு செய்தொழில்
எல்லை எந்த மட்டும் அந்த மட்டும் இன்பமே எனக்
கல் உறழ்ந்த நானு நன்கு கண்டனன் சிகிப்பரா" (செ.76)

**175. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.77இல்)**

சுவாமிகள் குமரவேளை "பெரியவற்றுக்கெல்லாம் பெரிய பொருளாகிய அரசனே! சிவராச யோகத்து வெளிப்படு வோனே! பாசத்தை நாசம் செய்வோனே! பாவகீ! என்று அழைக்கின்றார்.

**176. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

பிரமம் ஆகிய உன்னையும், உன்னைப் போற்றுவதாக எண்ணி எப்போதும் ஏதோ பிதற்றிக் கொண்டிருக்கும் என்னையும் நிலைத்தினைப் பொருளும், இயங்குதினைப் பொருளும் நிறைந்த உலகத்தில் தனித்தனி பிரித்து வைப்பது அந்த வலிய மனத்தின் செயலே என்பதை அறிந்து கொண்டுள்ளேன் என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"பரம ராஜ ராஜயோக **பாசநாச பாவகீ**
பிரமமான உன்னையும் பிதற்று என்னையுஞ் சரா
சரம கிக்கண் வேறு வேறு தள்ளி வைத்து நிற்பது அவ்
உரமனத்ததே என உணர்ந்துள்ளேன் உணர்ந்துளேன்"
(செ.77)

''பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே'' (சிவபுராணம், வரி, 64) என்று மாணிக்கவாசகர் கூறுவது இங்கு (பாச நாச என்பதுடன்) நினைவுகூரத்தக்கது.

**177. பாவகீ என்ற சொல்லின் பொருள் யாது?**

பாவகீ என்பது முருகன் என்று பொருள்படும். (நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி).

**178. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.78இல்)**

நாத தத்துவத்தை உணர்த்தும்படி ஒலி நிறைந்த பொற்சிலம்பு பூண்டு மணம் தங்கிய திருவடி உடையவனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

"நாத விந்து கலாதி நமோ நம" என்று அருணகிரிநாதர் கூறுகின்றார்.

**179. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

யாவற்றையும் அறியும் மனமானது உள்ளக் குகையில் ஒடுங்கியுள்ள நிலையில் கூட்டமான இவ்வுலகமும் இல்லை. நின்னை வேறாக நின்று காணும் நானும் இல்லை. தூய்மையான சிதாகாசம் ஒன்றே நிலவியது. அத்தன்மை யாதோ? உரைத்தருள்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"உணரும் என்றன் நெஞ்சமானது உள்ளகத்து ஒடுங்கு கால்
கணவுலோகம் இல்லை வேறு கண்ட நானும் இல்லை தூ
அணவு வானம் ஒன்றிருந்தது அற்றி யாது உரைத்தருள்
மணம் ஆறாத பாத நாத மல்கு பொற்சிலம்பனே" (செ.78)

**180. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.79இல்)**

சிலம்பு, அரிய சதங்கை, தண்டை முதலியன அணிந்த திருவடியுடைய தேவதேவனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**181. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

என் உடல் நோய்கள் ஓடவும், வறுமை ஓடவும், வீணிலே படும் என் புலம்பல் ஓடவும், என் புன்மை ஓடவும், நலம் விளங்கும் அகண்ட சிவயோக ஞானமாக எழுந்தருள்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"சிலம்பு அருஞ் சதங்கை தண்டை சேர்ப தச்சுரேசுரா
நலம் பிறங்க கண்ட யோக ஞானமா எழுந்தருள்
**உலம்பென்** அங்கநோய்கள் ஓட **ஒற்கும்** ஓட வீணிலே
புலம்பல் ஓட **ஒல்கலே** பொருந்து **புன்மை** ஓடவே" (செ.79)

**182. உலம்பு என்ற சொல்லின் பொருள் யாது?**

உலம்பல் என்பது ஒலித்தல் என்று பொருள் படும்.

**183. ஒற்கம் என்ற சொல்லின் பொருள் யாது?**

ஒற்கம் என்பது வறுமை என்று பொருள்படும்.

**184. ஒல்கல் என்பதன் பொருள் யாது?**

ஒல்கல் என்பது தளர்தல், துவளல், **மெலிதல்** என்று பொருள்படும்.

**185. புன்மை என்பதன் பொருள் யாது?**

புன்மை என்பது ஈனம், சிறுமை, **துன்பம்,** வறுமை என்று பொருள்படும். (தமிழ்மொழி அகராதி)

**186. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.80இல்)**

சிவந்த திருமேனியுடைய பெருமானே என்று சுவாமிகள் அழைக்கின்றார். முருகப் பெருமான் சிவந்த நிறம் உடையவன். ஆதலால் சேயோன் என்றும் செவ்வேள்

என்றும் கூறுவர். "சேயோன் மேய மை வரை உலகம்" என்பது தொல்காப்பியம்.

**187. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

நிலையில்லாது கண்ட இடம் எங்கும் ஓடலால் என் இன்பத்தை ஒழித்துத் துன்பத்தை வருவிக்கும் மனத்தை நோவேனோ. நின் அழகைப் பாராமல் நேரிழையார் பால் நாடும் என் கண்களை நோவேனோ. நின் புகழ் இன்பில் தோயாது புல்லிய கதைகளையும், பாடல்களையும் நயக்கும் என் செவியை நோவேனோ. என் தவநெறிக்கண் இசையாது என்னோடு ஊடல் புரியும் உடம்பை நோவேனோ. சுவைமிக்க பண்டங்களை விரும்பி உண்டு அருள்நெறிக்கு ஊறு செய்யும் என் நாவை நோவேனோ. மணம் உள்ள பொருள்களை நாடும் என் மூக்கை நோவேனோ. (இனி யாது செய்வேன். அறிகிலேன் காத்தருள்) என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"ஓடலில் சுகம் கெடுத்த உன்னை நோவனோ விழி
நாடல் எண்ணி நோவனோ நயப்பில் காதை நோவனோ
ஊடல் எண்ணி நோவனோ உணர்வை நோவனோ மணந்
தேடல் எண்ணி நோவனோ சிவந்தமேனியாய் இனி"

(செ.80)

**188. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.81இல்)**

அகத்திய முனிவருடைய வழிபாட்டை ஏற்கும் மனம் மிகுந்த தாமரை ஒத்த திருவடியுடையவனே துன்பத்துக்கு மூலம் இதுவே என்றுணர்ந்து மனத்தை ஒறுக்கும் பெரியோர் "அடைக்கலம் தருக" என்று வணங்கும் சிலம்பணிந்த திருவடியுடையவனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**189. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

இனியேனும் அடியவனின் உண்மையான அன்பை திருவுள்ளத்தில் கொண்டு உன் உள்ளம் குளிர்ச்சி அடைந்து "என் மகனே! திருவருள் கிட்டுமோ கிட்டாதோ என்று அச்சமாகிய துன்பம் இனி உனக்கு இல்லை என்று மொழிந்தருளி எல்லாச் சுவைகளையும் மீறி நிலவும் பேரின்பத்தை அருள்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"இனி என்றன் அன்புதனை நன்கு உணர்ந்துள்
இதயம் குளிர்ந்து என் மகனே
**துனி** என்ற துன்பம் இலை என்று அறைந்து
சுவை வென்ற இன்பம் அருளாய்
முனியென்ற கும்பனது வந்தனம் கொள்
முருகண்டு கஞ்ச அடியாய்
**பனி** என்றகங் கொல்பவர் தஞ்சம் என்று
பரவுஞ் சிலம்பு அடியாய்" (செ.81)

**190. துனி என்றதன் பொருள் யாது?**

துனி என்பது அச்சம், கோபம், துன்பம், நோய் என்பன. (தமிழ்மொழீ அகராதி)

**191. பனி என்ற சொல்லின் பொருள் யாது?**

பனி என்பது அச்சம், துக்கம், நடுக்கம் என்பன (தமிழ்மொழி அகராதி)

**192. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.82இல்)**

கங்கை நதியில் ஆறு தீப்பொறிகளாய்த் தங்கி கருணை கூர்முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்ட ஒரு திருமுகன் என வந்தோனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**193. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

முடிவும் முதலும் இல்லாதது. எங்கும் நிறைந்தது அன்பர்களின் அருள்படிந்த நெஞ்சத்தைச் சேரும் அன்பை உவந்த பெரிய பொருளாவது என்று நின் அருளடைந்தோர் நின்னைப் போற்றிக் கூறுவர். என் அறியாமை நீங்கும் அளவும் என் உள்ளத்தில் உவகையோடு விரவி நிற்பாயாக. அன்பனே என்று அழைப்பாயாக. மேலும் உள்ளத்தில் நடிப்பாயாக. அந்த பேரின்பத்தையும் அடியேனுக்கு வழங்கியருள்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"அடி அந்தம் ஒன்றும் இலது எங்கு(ம்) நின்றது
　　அகளங்கம் அன்பர் அருளே
படியந்த நெஞ்சில் உறு நண்பு உகந்த
　　பரம் என்பர் உன்றன் அருளோர்
விடியந்தம் என்றன் உள நின்று வந்து
　　விர வன்ப வென்று புகன் **மேல்**
**நடி** அந்த இன்பும் அருள் விஞ்சு கங்கை
　　நதி தங்கி வந்த **நறவே"** (செ.82)

உள்ளத்தில் நடி – "எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே நட்டம்" (உண்மை விளக்கம், செ.31).

(8+2=10=ய=உயிர்) என்று திருவதிகை மனவாசகம் கடந்தார் கூறுகின்றார்.

**194. நறவு என்பதன் பொருள் யாது?**

நறவு – தேன். தேன் போன்று இனிமையானவன் என்று பொருள்படும்.

**195. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.83இல்)**

தேன் செறிந்த மாலை கொண்ட திருத்தோளினனும்,

திருச்சிற்றம்பலத்துத் திருக்கூத்தாடும் சிவபெருமானைத் துணைவனாகக் கொண்டு விளங்கும் இறைவியான உமாதேவியின் திருவுள்ளம் இன்புறுகின்ற அழகிய திருமேனி கொண்ட குழந்தாய்! அழகிய குறத்தியாகிய வள்ளிப் பிராட்டியின் திருவுள்ளம் விரும்பும் தூயகுணனே! ஞானவடிவாய பொன்வேல் கொண்ட பெருமானே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**196. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

துறவு என்னும் செம்மாப்பில் என்னை வைத்தருளி அளவற்ற இன்ப நிட்டை முற்றுமாறு அருள் செய்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“நறவுற்றிருக்கும் ஒலியற் கழுத்தி
        நடனப் பொதிக்கண் அமர்வோர்
உறவுற்றிருக்கும் இறைவிக்கு இனிக்கும்
        உருவைத் தரித்த **மதலாய்**
குறவுச்சி தப்பெண் உளநச்சு சுத்த
        குண அற்புதப் பொன் அயிலாய்
துறவுச்  செருக்கின் நனிவைத்த அளப்பில்
        சுகநிட்டை முற்ற அருளே”                (செ.83)

மதலை–பிள்ளை.

**197. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.84இல்)**

சிறு தெய்வங்களை வழிபட்ட பித்தர்களின் உள்ளத்தில் நிலைபெறுதற்கு அரிய தெய்வமே! இருள் வெட்கப்பட்டு ஓடும்படி செய்யும் குழலையுடைய குறத்தியாகிய வள்ளி பெருமாட்டியின் திரு அழகை விரித்துரைக்கும் இளையோனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**198. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

திருவருளைப் போற்றி நின் திருவடியை வழிபட்டு நின் அடியவரைப் பணிந்து புகழ்ந்து ஆணவ மலமாகிய இருளை விரட்டும் வல்லமையுடைய ஞானிகளின் உள்ளத்து எழும் ஞானஇன்பத்தை அடியேனுக்கு அருள்புரிக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“அருளைத் துதித்து உன் அடியைத் துதித்துன்
அடியர்த் துதித்து மலமாம்
இருளைத் துறத்தும் வலியுற்றவர்க்குள்
எழு சிற்சுகத்தை அளியாய்
மருளைத் துதித்து வழிபட்ட பித்தர்
மனசிற் பிணிக்க அரியோய்
கருளைத் துரத்தும் **அளகக் கொடிச்சி**
கவினைக் கணிக்கும் இளையோய்” (செ84)

**199. அளகக் கொடிச்சி என்பதன் பொருள் யாது?**

கூந்தலையுடைய குறத்தியாகிய வள்ளிப்பிராட்டி என்று பொருள்படும்.

**200. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.85இல்)**

அழிவற்ற மணிகள் பதித்த அழகிய மகுடத்தை அசைத்து மயிலூர்ந்து வரும் என் அப்பனே என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**201. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

கனத்த கழலோடு நீ அணியும் தண்டையிலுள்ள பரல்களாகிய முத்துக்களின் விலையை கணிதநூல் வல்லார் எவரும் மதித்துக் கூற அரியது என்று நின் திருவடி கண்ட

அறிஞர்கள் விளங்க உரைப்பர். அந்த ஞானிகளின் அழகு பொருந்திய நின் திருவடி என்னும் பேரின்பத்தில் என்னை இருத்தி அருள்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“கணிதம் படித்த எவரும் கணிக்க
அரிது உன் கனத்த கழலோடு
அணி தண்டை முத்தம் என நன்கு உரைப்பர்
அடி கண்ட சித்தர் அழியா
மணி தங்கு **பொற்பு** மகுடம் துளக்கி
மயிலுந்து என் அப்ப(ன்) அறிவார்
துணி தந்துன் **ஒட்ப** அடி **என்ற சுத்த
சுக இன்பிருத்தி** அருளே” (செ.85)

**202. பொற்பு என்ற சொல்லின் பொருள் யாது?**

பொற்பு என்பது அழகு, பொலிவு என்று பொருள்படும்.

**203. ஒட்ப என்ற சொல்லின் பொருள் யாது?**

ஒட்ப – அழகு, மேன்மை.

**204. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.86இல்)**

அடியவர்களின் அன்பு வெள்ளத்தின் இடையில் வந்து உதிக்கு(ம்) முருகா என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**205. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

அருவென்றோ உருவென்றோ அருவுரு என்றோ கூறலும் பொருந்தாமல் விளங்கும் ஒப்பற்ற மெய்யின்ப ஞானமாய்த் திகழ்வது பரம்பொருள் என்று வேதாந்தம் (உபநிடதம்) ஓலமிடும். என் உள்ளத்தைப் பற்றிய ஆணவமலத்தால் தோன்றும் அச்சத்தை வென்று நிற்கும் நிலை எனக்கு வழங்கி நினது ஒள்ளிய திருவடிக்கண் இன்பமுற்றிரு என்று

அப்பேற்றினை எனக்கு அருள்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“அரு என்று உரைக்க உரு என்று உரைக்க
அலதென்று உரைக்க அமையாது
ஒரு இன்ப நித்த அறிவென்று அரற்றும்
உனை அந்த ஒட்ப மறை நான்
**வெரு** வென்று நிற்குநிலை நன்களித்து
**மிளிர் ஒண் பதத்தில் இனிதாய்**
**இரு என்று இருத்தி** அருள் அன்பர் அற்பின்
இடை வந்து உதிக்கு முருகா” (செ.86)

சைவ சித்தாந்தத்தில் இறைவனுக்கு அரு, உரு, அருவுரு என்று மூன்று நிலைகள் கூறப்படும்.

‘‘அருவமும் உரூவா ரூபம் ஆனதும் அன்றி நின்ற உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்கு உள்ள ஆமே” (சிவஞான சித்தியார் சுபக்கம், செ.58) என்று அருணந்தி சிவாசாரியாரும், பரம்பொருள் முற்கூறிய மூன்று திருமேனிகளை உடையவனாய் இருந்தாலும் மெய்யுணர்ந்தவர்க்கு ஞானமே தன் இயல்பாக விளங்கி நிற்பன் என்று உமாபதி சிவமும் கூறுகின்றார்.

“அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவம் உடையான் உளன்” (திருவருட்பயன், 5)

**206. வெகு என்ற சொல்லின் பொருள் யாது?**

வெரு என்பது அச்சம் என்று பொருள்படும்.

**207. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.87இல்)**

கொடுமையில் ஒப்பார் இல்லாத கிரவுஞ்ச கிரியைத்

தூள்படுத்திய வெற்றிவேலை உடைய பரமனே! தேவர்குடி வாழும்படி காத்தருள் பெரியோனே! மணம் ஊட்டிய மஞ்சள் விளங்கும் அழகிய உடம்பும் மலைமுகடு ஒத்த முலைகளும் உடைய தேவமாதர் போற்றும் ஞானசக்தியாய் வீறி நிற்கும் ஒப்பற்ற தூய தெய்வ யானை விழையும் கந்தனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**208. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

இனியேனும் அடியேன் வருத்தம் இல்லாமல் மேம்பட்ட அறிவு எய்தி விளங்க அருள்புரிவாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"முரு கிட்ட மஞ்சள் அவிர் பொற்பு உடம்பு
முகடு ஒத்த கொங்கை உடையார்
கருது ஒட்பம் விஞ்சும் ஒரு சுத்த குஞ்சரியின்
**இட்ட** கந்த இனி நான்
ஒரு **கட்டமும்** படுதல் அற்று உயர்ந்த
உரனுற்றி அங்க வருளோர்
குரு கட்ட வென்றி அயில் அத்த**அண்டர்**
**குடி**யைப் புரந்த பெரியோய்" (செ.87)

குஞ்சரி–தெய்வயானை. இட்ட(ம்)–அன்பு.

**209. கட்டம் என்றதன் பொருள் யாது?**

கட்டம் – வருத்தம், துன்பம்.

**210. அண்டர்குடி என்பதன் பொருள் யாது?**

தேவர் குடி எனப் பொருள்படும்.

**211. சுவாமிகள் குமரவேளை எப்படி அழைக்கின்றார்? (செ.88இல்)**

நல்ல கடப்ப மாலை அணிந்த மலைகளினும் வலிமை

வாய்ந்த தோளுடையவனே! மகாதேவனே! தேவர்கள் வழிபடும் தெய்வமே! தொண்டர் அன்பில் எழுந்தருளும் தலைவனே தாருகவன முனிவர் ஏவிய யானையை உரித்த சிவபெருமானுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் முருகா! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**212. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

என்னைத் துரிய நிலையில் இருத்தி (இது பரம். இது உலகம் என வேறுபடுத்திக் காட்டும்) திரோதான சக்தியாகிய கதவைத் திறந்து என் உள்ளத்துள் சுடரில் சிறந்த சுடராக விரவும்படி உறுதி செய்து அருள்புரிவாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"பெரியத்த **உம்பர்** பணியத்த தொண்டர்
　　பிரியத்து அமர்ந்த தலைவா
**கரி**யைத் தடிந்த பெரியர்க்(கு) இதஞ்செய்
　　களியைக் கொணர்ந்த முருகா
துரியத்திருந்து கதவைத் திறந்து
　　**சுடரில் சிறந்த சுடராய்**
விரியத் திடஞ்செய்து அருள் நற்கடம்பும்
　　இலை **வெற்பின்** விஞ்சு புயனே" (செ.88)

**213. உம்பர் என்ற சொல்லின் பொருள் யாது?**

உம்பர் என்பது வானோர் என்று பொருள்படும்.

"**உம்பர்** தருதேனுமனிக் கசிவாகி" (திருப்புகழ்) என்று அருணகிரிநாதர் கூறுவது நினைவுகூரத்தக்கது.

**214. கரி என்றதன் பொருள் யாது?**

கரி – யானை.

**215. சுடரில் சிறந்த சுடராய் – எடுத்துக்காட்டு தருக.**

“சோதியாய் நிறைந்தான் சுடர்ச் சோதியுள் சோதியான்” (1:142:7) என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

**216. வெற்பு என்பதன் பொருள் யாது?**

வெற்பு என்பது மலையைக் குறிக்கும்.

**217. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.89இல்)**

மேகத்தைப் போல இரப்பவர்க்கு இல்லை என்னாத வள்ளல்கள், நன்னெறி ஒழுகுவோர் புலவர் ஆகியோர் உள்ளத்தில் வாழும் பரம்பொருளே! திருஞான வண்ணனே! யாவற்றையும் சங்காரம் செய்யும் விமலனே! சங்கரித்த யாவற்றையும் மீட்டும் படைக்கும் அயனாயிருப்பவனே! படைத்தவற்றைக் காக்கும் திருமாலாய் இருப்பவனே! என் உள்ளத்துள் அறிவாய் விளங்கும் வேற்பரமனே! என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**218. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

எனக்கு நன்மையை அருளி என் வினையின் வேரை அறுக்கும் நாடகத்தைச் செய்யத் திருவுள்ளம் கொள்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

“**புயல்** நேர் கொடைக் கையினர் **நீத** நட்பர்
புலவோர் அகத்தில் உறையோர்
வியனே திருச்**சின்மயனே** முடிக்கும்
விமலா முடித்த உலகீ
அயனே அளிக்கும் அனகா எனக்குள்
அறிவாய் இருக்கும் **அயிலாய்**
**நயனே** கொடுத்து என் வினை வேரறுக்கு
**நடமே** நடிக்க நினையே” (செ.89)

**219. புயல் என்பதன் பொருள் யாது?**

புயல் என்பது மேகம் எனப் பொருள் படும்.

"ஏரின் உழாஅர் உழவர் **புயல்** என்னும்
வாரி வளங்குன்றிக் கால்" (குறள், 14)
என்று வள்ளுவர் கூற்றில் புயல் என்பது மழையைக் குறிப்பதைக் காண்க.

**220. நீதம் என்பதன் பொருள் யாது?**

நீதம் என்பது நன்னெறி என்று பொருள் படும்.

**221. சின்மயனே என்பதன் பொருள் யாது?**

சின்மயம் – ஞானமயம். சின்மயன் என்பது ஞானமய மானவனே என்று பொருள் படும்.

"ஞான பண்டித சாமி" (திருப்புகழ்) என்று அருணகிரிநாதர் கூறுகின்றார். "ஞானப்பொருள்" (1:38:3) என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

**222. விமலா என்பதன் பொருள் யாது?**

பாசங்களின் நீங்கியவன் என்று பொருள்படும்.

**223. முடிக்கும் விமலா முடித்த உலகீ அயனே அளிக்கும் எடுத்துக்காட்டுத் தருக.**

"தோற்றுவித்து அளித்தும் பின்னும் துடைத்தருள் தொழில்கள் மூன்றும் போற்றவே உடையன் ஈசன்" (சிவஞானசித்தியார் சுபக்கம், செ.53) என்று அருணந்தி சிவாசாரியாரும்,

"படைத்து அளித்து அழிப்ப மும்மூர்த்திகளாயினை" (1:128:வரி,4) என்று திருஞானசம்பந்தர் கூறுவதும்

முற்கூறிய அடிகளுடன் ஒப்புநோக்கத்தக்கன.

**224. "அயிலாய்" என்றதன் பொருள் யாது?**

அயிலாய் - கந்தக் கடவுள். வேற்படையுடையவன் என்று பொருள்படும்.

**225. நயன் என்பதன் பொருள் யாது?**

நயன் என்பது இன்பம், நன்மை என்று பொருள்படும்.

**226. நடம் என்பதன் பொருள் யாது?**

நடம் என்பது நடனம் என்று பொருள்படும்.

**227. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு அழைக்கின்றார்? (செ.90இல்)**

இணையற்ற அருள் உடையோனே! தவம்புரிவோரின் தவமாகி யாவரினும் மேம்பட்ட பெரியோனே! அளவைக்கு அடங்காத கழல் அணிந்த நினது திருவடிகளை ஒளிவீசும் வேற்கை அரசே" என்று சுவாமிகள் அழைக்கின்றார்.

**228. சுவாமிகள் குமரவேளிடம் என்ன கூறுகின்றார்?**

உன்னையே நினைக்கும் எளியேன் அறியாமையால் உலகத்தில் செய்த பெருந்தீவினையால் என் உள்ளத்தில் கரந்து நிற்கும் செயலும் அருட்கடலாய உனக்கு உரியதாமோ. எனக்கு அருள்வாயாக என்று சுவாமிகள் கூறுகின்றார்.

"நினையே நினைக்கும் எளியேன் மடத்தின்
நில மீதில் இழைத்த பவமா
வினையே கணித்து நடுவே ஒளிக்கும்
வினைதான் உனக்கு உரியதோ

தனையே நிகர்த்த தயவோய் தவத்தர்
தவமாகு(ம்) மிக்க பெரியோய்
**கனை**யேறு அளப்பில் கழலே கொடுத்தி
கதிர்கால் அயிற்கை அரசே" (செ.90)

**229. கனை என்ற சொல்லின் பொருள் யாது?**

கனை என்பது ஒலி எனப்பொருள்படும்.

**230. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு போற்றி அருள்கின்றார்? (செ.91இல்)**

அரசே! அமுதே! அருள்திருமேனி பரனே அடைக்கலம். சிவனார் மகனே அடைக்கலம். தாமரை ஆசனம் உடையவனே அடைக்கலம். தேவர் முடியில் விளங்கும் திருவடியோனே அடைக்கலம். குற்றமாகிய இருளைப் பிளக்கும் குமரனே! சிவசங்கரனே! ஞானவடிவனே! என்னை ஆண்டருள் அருளே வடிவானவனே அடைக்கலம் என்று சுவாமிகள் போற்றி அருள்கின்றார்.

அறுமுகச் சிவனின் எண் குணங்களுள் ஒன்று தூய உடம்பினன் என்பதாம். சுவாமிகள் அதையே அருள் திருமேனி என்கின்றார்.

குற்றமாகிய இருளைப் பிளக்கும் குமரன் – "என்னுடை இருளை ஏறத் துரந்தும்" (கீர்த்தித் திருஅகவல், வரி,6) "இருள் கெட அருளும் இறைவா போற்றி" (போற்றித் திருஅகவல், வரி, 169) என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

"அரசே அமுதே அருளா மாதாரபரா சரணம்
பரசேயவனே சரணம் பதும ஆசனனே சரணம்
சுர சேகரனே சரணம் துகள் போழ் குமரா சிவசங்கர
சேதனனே எனை ஆள் **கருணாகரனே** சரணம்" (செ.91)

சுவாமிகள் குமரவேளுக்குச் சரணம் என்று பாடியது போல மாணிக்கவாசகர் அறுமுகச் சிவனுக்கு அடைக்கலம் என்று கூறி தனியொரு பதிகமே அருளி உள்ளார்.

**231. இறைவனைக் கருணாகரன் என போற்ற எடுத்துக்காட்டுத் தருக.**

“என் பெரும் **கருணையாளனே** போற்றி” (திருச்சதகம், செ.97)

“மருவிய **கருணை மலையே** போற்றி” (போற்றித் திருஅகவல், வரி, 194)

**“கருணையின் பெருமை** கண்டேன் காண்க” (திருஅண்டப் பகுதி, வரி, 60) என்று மாணிக்கவாசகர் சிவபெருமானைப் போற்றுகின்றார்.

**232. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு போற்றுகின்றார்? (செ.92)**

உயிர்களின் தலைவனே! இறப்பும் பிறப்பும் இல்லாதவனே அடைக்கலம். வரநாதனே! தொளைபடாத மணியே அடைக்கலம். வேல் ஏந்திய செங்கையுடைய தலைவனே! தீவினைகளின் கழுவாய் தெரியாத என்னை ஆண்டருள். பரதெய்வமே அடைக்கலம். பழமைக்கும் பழமையான தலைவனே அடைக்கலம் என்று சுவாமிகள் போற்றுகின்றார்.

சரநாயகனே மரணம் சனனம் காணாய் சரணம்
வரநாயகனே பொள்ளா மணியே சரணம் **செரு**வேல்
கரநாயகனே பாவக் கழுவாய் அறியா எனை ஆள்
பரநாயகனே சரணம் **பழையார்** பதியே சரணம்” (செ.92)

**233. செரு என்ற சொல்லின் பொருள் யாது?**

போர், யுத்தம் என்று பொருள்.

**234. பழையார் பதி – எடுத்துக்காட்டுத் தருக.**

“முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே” (திருவெம்பாவை, செ.9) என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

**235. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு போற்றுகின்றார்? (செ.93இல்)**

தலைவனே அடைக்கலம். வச்சிரப் படையானே அடைக்கலம். பெருங்கருணையுடையவனே அடைக்கலம். ஒளிமிக்க நீண்ட வேலினையுடைய இறைவா! வினைகளை அழிக்கும் ஞானமே. மதியாதவர்பால் சேரா இளையோனே! அடைக்கலம். புகலிடம் எதுவுமில்லா என்னை ஆண்டருள். கலைகளின் தலைவனே அடைக்கலம் என்று சுவாமிகள் போற்றுகின்றார்.

**236. கருணாநிதி–சில எடுத்துக்காட்டுக்கள் தருக.**

பேரருளுடையவன் என்று பொருள்படும்.

“மாறு இலா மாக் **கருணை வெள்ளமே”** (திருச்சதகம், செ.91) என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

**237. “வினை சூழ் மதியே” – எடுத்துக்காட்டு தருக.**

‘‘வினையின் தொகுதி ஒறுத்து என்னை ஆண்டுகொள்’’ (நீத்தல் விண்ணப்பம், செ.6) என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

**238. “கதி ஏதுமில்லா எனை ஆள்” – எடுத்துக்காட்டு தருக.**

“போற்றியோ நமச்சிவாய! புகலிடம் பிறிது ஒன்று இல்லை” (திருச்சதகம், செ.62) என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

**239. செ.93ஐ எழுதுக.**

“பதியே சரணம் வயிரப்படையாய் சரணம் **கருணா**
**நிதியே சரணம்** சுடர்ச்சான் நெடுவேல் இறையே வினைசூல்
மதியே மதியாதார்பால் மருவா மழலே சரணம்
கதி ஏதுமில்லா எனை ஆள் கலைநாயகனே சரணம்”
(செ.93)

**240. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு போற்றுகின்றார்? (செ.94இல்)**

கலைகள் நிரம்பிய வேதங்களை உணர்ந்து நின் திருவருள் ஒன்றையே கருதுகின்றன. ஞானத்தை உணருமாறு கருதுகின்ற எளியேனின் தலைவனே அடைக்கலம். வில் வேல் முதலிய படைகளையுடைய வஞ்சகம் நிறைந்த அரக்கரின் வலி முழுதும் அழிக்கும் இலை வடிவாய வேலுடையவனே அடைக்கலம். அழியாத பேரின்ப வீட்டுச் செல்வம் உடையவனே அடைக்கலம் என்று சுவாமிகள் போற்றுகின்றார்.

“கலைவேதம் உணர்ந்து அருளே கருதும் பெரியார் அடைமா
நிலைவேதம் உணர்ந்திடவே நினை என்பரனே சரணம்
சிலை வேலுடை வஞ்சகரின் திறல் யாவையும் **நூறிடுமார்**
இலை வேலுடையாய் அழியா **விருவான்** அடையாய்
சரணம்” (செ.94)

**241. நூறிடும் என்ற சொல்லின் பொருள் யாது?**

நூறுதல் என்பது அழித்தல் எனப் பொருள்படும்.

**242. விருவான் என்பதன் பொருள் யாது?**

பேரின்ப வீட்டுச் செல்வம் உடையவன் என்று பொருள் படும்.

“பேரா ஒழியா பிரிவு இல்லா
மறவா நினையா அளவுஇலா
மாளா இன்ப மா கடலே” (பிரார்த்தனைப்பத்து,செ.6)
என்று மாணிக்கவாசகர் பேரின்பம் பற்றிக் கூறுகின்றார்.

**243. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு போற்றுகின்றார்? (செ.95இல்)**

பேரம்பலத்து நிறைந்த அறிவே அடைக்கலம் வாடுதல் இல்லாத மலரே. அம்மலரின் மணமே! கெடுதல் இல்லாத அழகே! அணையாது என்றும் ஒளி வீசும் விளக்கே! அமுதமே! ஊனாலான கருப்பையில் மீண்டும் புகாது உயர்வையே விரும்பும் என்னுடைய குருவே! தேன் ஒத்த அருளை வழங்கி என்னை ஆட்கொள். மயிலூரும் தெய்வமே அடைக்கலம் என்று சுவாமிகள் போற்றுகின்றார்.

“வானார் அறிவே சரணம் வாடா மலரே மணமே
**ஆனா** அழகே அமரா தவிர் தீபகமே அமுதே
ஊனார் **உதரம்** புகுதா உயர்வைக் கருதுஎன் குருவே
தேனா மருடந்து எனை ஆள் **சிகியூர்** தேவே சரணம்”
(செ.95)

**244. ஆனாமை என்ற சொல்லின் பொருள் யாது?**

கெடுதல் இல்லாத என்று பொருள் படும்.

**245. சிகி என்ற சொல்லின் பொருள் யாது?**

சிகி என்பது மயில் என்று பொருள் படும்.

**246. உதரம் என்ற சொல்லின் பொருள் யாது?**

உதரம் என்பது கருப்பை என்று பொருள்படும்.

**247. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு போற்றுகின்றார்? (செ.96இல்)**

தேவனே! முன்பு ஒருநாள் நின் திருநாவை அசைத்து ஒலித்து எளியேனின் கருத்து முற்றுறப் பதினேழு ஆண்டுகள் கழிதல் வேண்டும் என்று மெய்யுரை சுட்டிய நாள் நெருங்க இன்னும் சில நாட்களே உள்ளன. இவ்வுலகில் நான் இருக்க வேண்டிய விதி கழியும் அளவும் ஊன் நிரம்பிய இந்த உடம்பை நீக்க மாட்டாயோ! வேலிறைவனே! என்னை ஆட்கொள். என்னுயிர்த் தலைவனே அடைக்கலம் என்று சுவாமிகள் போற்றுகின்றார்.

"தேவே பதினேழ் வருடம் செலும் என்று இதன்
முன்பொரு நாள்
நாவே அசையா ஒலியா நவில் கட்டுரை நாள் சிலவே
பூவே கழியும் காறும் **புலவார் உடலைப்** பிரியாயோ
வேலிறையே என்னை ஆள் உயிர் நாயகனே சரணம்"
(செ.96)

**248. புலவு என்ற சொல்லின் பொருள் யாது?**

புலவு என்பது ஊன், புலால் என்று பொருள்படும்.

''புன்புலால் யாக்கை'' (பிடித்தபத்து, செ.10) என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

**249. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு போற்றுகின்றார்? (செ.97இல்)**

உயிர்களின் குற்றம் எல்லாம் அழியும்படி உபதேசவரம் தருவோய். குற்றம் இல்லாத அரனே! சிவனே அடைக்கலம். தவமாகிய பயிர் வளரும்படி பாயும் நீரே! நிரம்பிய சர்க்கரையே! (சர்க்கரை போன்று இனியவனே) என்னை ஆட்கொள். ஒப்பற்றவனே! வேலாயுதனே மயில் வாகனம்

உடையோனே! அடைக்கலம் என்று சுவாமிகள் போற்றுகின்றார்.

“உயிர் ஏதம் எலாம் அழியுமாறு உபதேச வரம் தருவோய்
**செயிர்**ஏதும் இலா அரனே சிவனே சரணம் தவம்என்
பயிரே வளரும்படியே பாயும் புனலே சுவை சால்
**அயிரே** எனை ஆள்அதுலா வயிலா மயிலா சரணம்”
(செ.97)

செயிர் – குற்றம்.

**250. அயிர் என்ற சொல்லின் பொருள் யாது?**

சர்க்கரை என்று பொருள்படும்.

**251. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு போற்றுகின்றார்? (செ.98இல்)**

மயிலை ஒத்த மடப்பம் பொருந்திய தெய்வயானைக்கு இனியவனே! என்னை ஆட்கொள். வெயிலை ஒத்து ஒளிரும் பல அணிகளும் ஒளிவிடும்படி நடனமிடும் ஒப்பில்லாதவனே! பெருச்சாளியை ஊரும் விநாயகரின் இளையோனே! பதிநூலை குயிலை ஒத்த இனிய குரலில் கூறும் மகாமுனியே! குகனே! அடைக்கலம். அடைக்கலம் என்று சுவாமிகள் போற்றுகின்றார்.

“மயில் ஒத்த மடச் **சூர்மாமகளுக்கு** இனியோய் எனைஆள்
வெயில் ஒத்த ஒளிப் பலபூண் மின்னும்படி பன்னடனம்
பயில் ஒப்பலியே **எலியூர் பரனார் துணைவா** பதிநூல்
குயில் ஒட்ப மகாமுனியே குகனே சரணம் சரணம்” (செ.98)

சூர்மா மகள் – தெய்வப் பெண்.

**252. எலியூர் பரனார் துணைவா என்ற சொல்லின் பொருள் யாது?**

பெருச்சாளியை ஊரும் விநாயகரின் இளையோய் என்று பொருள்படும்.

**253. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு போற்றுகின்றார்? (செ.99இல்)**

குகனே குகனே என்று கூறுவோர் நாவில் வாழ்பவனே! பெருமை பொருந்திய ஆறுமுகனே! அடைக்கலம் குண்டலம் அணிந்த முருகனே அடைக்கலம். பார்வதியின் மகனே அடைக்கலம். திருமால் மருகனே அடைக்கலம். அடைக்கலம். இன்புருவனே அடைக்கலம். வழிபடும் என் இறைவனாய் வருபவனே அடைக்கலம் என்று சுவாமிகள் போற்றுகின்றார்.

"குகனே குகனே எனவே குயின் நா உறைவோய் அறுமா
முகனே சரணம் குழைபூண் முருகா சரணம் **சிவையின்
மகனே** சரணம் திருமால் மருகா சரணம் சரணம்
சுகனே சரணம் தொழும் என்று உரையாய் வருவாய்
சரணம்" (செ.99)

**254. சிவை என்ற சொல்லின் பொருள் யாது?**

சிவை – பார்வதிதேவி. சிவையின் மகன் – பார்வதி தேவியின் மகன்.

**255. சுவாமிகள் குமரவேளை எவ்வாறு போற்றுகின்றார்? (செ.100இல்)**

அறிவற்ற எளியனின் மருள் நீங்க வருவோனாகிய குருவே அடைக்கலம். திரு நிரம்பிய திருப்புகழ் கூறிய அருணகிரிநாதரின் செல்வச் சிவமே அடைக்கலம். பெருத்த மேகத்தை ஒத்த எப்போதும் பின்னிடாத அருளால் என்னை ஆட்கொள். ஒப்பற்ற தேவனே! நின் செல்வப் பெற்றோருக்கு

உலகம் சிதாகாசப் பெருவெளியே ஆகும் என்று சுவாமிகள் போற்றுகின்றார்.

“வருவா அறியா எளியேன் மருள்தீர் அடிகேள் சரணம்
திருவார் புகழ் சொன்ன பிரான் செல்வச் சிவமே சரணம்
பெருவான் எனவே நாளும் பின்றா அருளால் எனை ஆள்
ஒரு வானவனே உன் சீர்உறுநர்க்கு உலகம் பரமே”

(செ.100)

(ஒரு என்பது ஒப்பற்ற என்று பொருள்படும்.)

**256. திருவார் புகழ் சொன்ன பிரான் என்பது யாரைக் குறிக்கின்றது?**

அருணகிரிநாதரைக் குறிக்கின்றது.

**257. சீர் உறுநர் என்பது யாரைக் குறிக்கும்?**

குமரவேளின் பெற்றோரைக் குறிக்கின்றது.

**258. பரம் என்பதன் பொருள் யாது?**

பரம் என்பது இங்கு சிதாகாசப் பெருவெளி என்று பொருள் படும். (உரையாசிரியர் விளக்கம்).